# வெள்ளி



ஜனவரி '72

30 சதம்

# EDNA

A VITAMIN RICH & CALORIEFULL
FAMILY CHOCOLATE

## எட்னா சொக்லேட்

விட்டமின் சத்தும் சுவையும் மிக்கது.

## EDNA CORPORATION

UTUWANKANDA, MAWANELLA.

*Branches:*

**591, Galle Road,**
**Colombo-6**
*Phone: 86789*

**10, Katukelley Lake Road,**
**Kandy.**
*Phone: 538*

---

FOR ALL TYPES OF ELECTROPLATING,
ENGRAVING & POLISHING WORKS

## EDNA LIGHT ENGINEERING IMDUSTRIES

E. P. N. S. ware & Sports Goods Manufacturers

**ANWARAMA - MAWANELLA**

*Phone: 592*



# தர்மத்துக்குத் துணை!


அன்று நடந்த பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடந்தது. இன்று நடந்த பாரதப்போர் பதினுன்கே நாட்களில் முடிவடைந்து விட்டது, அன்றும் அறம் வென்றது. இன்றும் அறம் வென்றிருக்கிறது.

அன்று நடந்த பாரதப் போரில் தர்ம வீரர்களான பாண்டவர்கள் வெற்றி பெறுதற்குத் துணை செய்தவன், நேரடியாக ஆயுதமேந்திப் போரிடாமல், பார்த்தனின் சாரதியாக நின்று செயல்பட்ட மாயக்கள்ளனுன கண்ணன்!

இன்று தர்மத்தின் பக்கம் நின்ற பாரதம் வெற்றி பெறுவதற்குத் துணையாக நின்றது - அதர்மத்துக்குத் துணை நிற்கத் துடித்த அமெரிக்காவையும் சீனவையும், நேரடியாகப் போர்க்களத்தில் இறங்காமல், தனது "வீட்டோ" என்ற முட்டுக்கட்டையைக் கொண்டு தடுத்து நிறுத்தி வைத்த சோவியத் நாட்டின் நல்லுறவு!

துரியோதனனைப் போலக் கொக்கரித்த பாகிஸ்தானின் ராணுவ ஆட்சியாளர் யாஹியாகான் இன்று விலாசமே இல்லாத பேர்வழியாகப் போய்விட்டார். இவரது ஆப்த நண்பன் பூட்டோவே இவரது காலை வாரி விட்டுவிட்டார்.

பாகிஸ்தானின் ஆட்சிப் பீடத்தில் இப்போது பூட்டோ ஏறிக் குந்தியிருக்கிறார். யாஹியாகான் இருந்த இடத்தில் பூட்டோ! இது வெறும் ஆள் மாற்றம்தானா அல்லது கொள்கையிலும் மாற்றம் ஏற்படுமா?



இந்த பூட்டோ ஒரு நச்சு அரசியல் வாதி, அப்பட்டமான சுயநலவாதி. இந்த பூட்டோவின் பேச்சைக் கேட்டுத்தான் பாகிஸ் தானின் ராணுவ ஆட்சியாளர் யாஹியாகான் கிழக்கு வங்கத்துச் சிங்கம் முஜிபுர் ரஹ்மானை சிறையில் அடைத்தார்.

இப்போது என்ன நடந்திருக்கிறது? யாஹியாகானைப் பற்றி அக்கறை காட்டுவோர் யாருமேயில்லை. ஆனால் முஜிபுர் ரஹ்மானோ லட்சோப லட்ச விடுதலை விரும்பிகளின் உள்ளத்தில் கொலு வீற்றிருக்கத் தொடங்கிவிட்டார்;

சுதந்திர வங்காள தேசம் உதயமாகிவிட்டது.

நேர்மை, சத்தியம், தொண்டுள்ளம், அஞ்சாமை என்பனவற்றுக்கு இலக்கணமாகவுள்ள தலைமையின் கீழ் போராடுவார்களேயாயின், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, விடுதலை விரும்பும் மக்கள், தமது இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள் என்பதை சுதந்திர வங்காள தேசத்தின் பிறப்பு உறுதிப்படுத்தி இருக்கிறது.

யாஹியாகான், பூட்டோ, நிக்ஸன், மாவோ போன்ற சுயநல அரசியல்வாதிகளின் தில்லுமுல்லுகளை யெல்லாம் தனது அரசியல் சாணக்கியத்தனத்தினால் முறியடித்ததோடு நில்லாமல், போர்க்களத்திலும் பாகிஸ்தானை நிபந்தனையற்ற சரணாகதி அடையச் செய்ததன் மூலம், உலகப் பெருந்தலைவர்களுள் குறிப்பிடத்தகுந்த ஒருவராக இந்திரா காந்தி உயர்ந்து விட்டார்.

இந்திரா காந்தியும், அவருக்குத்துணையாக நின்ற சோவியத் அரசாங்கமும், சுதந்திர தாகம் கொண்ட உலகத்து மக்கள் அத்தனை பேரினது உள்ளத்திலும் ஒரு நிலையான உயர்ந்த இடத்தைப் பிடித்து விட்டார்கள்!

இவர்களுக்கு இத்தனை புகழ் கிடைத்துள்ளதையிட்டு ஆச்சரியப்படத் தேவையில்லை. தர்மத்துக்குத் துணை நிற்பவர்கள் தோற்றதாகச் சரித்திரமே கிடையாது!


# மண்ணுலகத்து

சென்ற மாத இறுதியில் லைப்சிக் நகரில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவிலே, ''திரா நதிக்கரையில் ஒரு கிராமம்'' என்னும் படத்துக்குத் தங்கப்பதக்கம் பரிசாகக்கிடைத்தது. தென் வியத்நாம் விடுதலை ஸ்டுடியோ தயாரித்த இத்திரைப்படம், தென் வியத்நாமிலுள்ள குவாங்காய் மாகாணத்தில் குக்கிராமம் ஒன்றிலே வாழும் மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தேசிய விடுதலைக்காகப் போராடுவதைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.

இச்செய்தியைப் படித்துக் கொண்டிருந்த பொழுது வியத்நாமிய கலை இலக்கியத்தைப் பற்றி என்மனம் எண்ணலாயிற்று. வியத்நாமிய அரசியல் விவகாரங்களைப் பற்றி இன்று உலகின் பெரும்பாலான மக்கள் அறிந்திருக்கிறார்கள். ஆனால் ஏறத்தாழக் கால்நூற்றாண்டாக அப்பிராந்தியந்தில் இடைவிடாமல் நிகழும் தேசிய விடுதலைப் போராட்டங்களின் மத்தியில் வீறார்ந்த கலைப்படைப்புக்களும் இலக்கிய ஆக்கங்களும் வெளிவந்துள்ளன என்பதைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள்.

சமீபத்தில் நண்பர் ஒருவர் மூலம் வியத்நாமிய இலக்கியங்கள் சிலவற்றைப் பெற்றேன். புகழ் பெற்ற வியத்நாமிய நாவல்கள் இரண்டின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் அவை. சில வருடங்களுக்கு முன் ''வியத்நாமிலிருந்து (எழுதப் பெற்ற) கடி

கலாநிதி க. கைலாசபதி



இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பிரகாசிக்கும் கலாநிதி கைலாசபதி அவர்களை தமிழறிந்தார் அனைவரும் அறிவர். இவரது ஆராய்ச்சி நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் ஈழத்து இலக்கியத்துறையில் ஒரு தனி இடம் வகிக்கின்றன. இவர் எழுப்பும் 'மண்ணுலகத்து ஓசை'கள் 'வெள்ளி'யில் தொடர்ந்து ஒலிக்கும்.

# ஓ சை க ள்...

● ○ ● ○ ● ○ ● ○

○ ● ○ ● ○ ● ○

தங்கள்'' என்ற தலைப்பில் இரு தொகுதிகளைப் படித்திருந்தேன் நெஞ்சை விட்டு நீங்காத பல கடிதங்கள் அத் தொகுதிகளில் இருந்தபோதும் அவற்றை முழுமையான இலக்கியம் எனக்கூறு தற்கில்லை. பிரசித்திபெற்ற நாவல்கள் என்ற வகையில் இவ் விரண்டையும் ஆர்வத்துடன் படித்தேன். அன்டுக் என்பவர் எழுதிய "ஹொன் டத்" குயென் கொக் என்பார் எழுதிய "அழிய மாட்டாத கிராமம்" ஆகிய இரண்டையும் படித்த போது புதுமையான உணர்வு ஏற்பட்டது. இரண்டுமே தேசிய விடுதலைப் போரைப் பொருளாய்க் கொண்டவை. சமகால வரலாற்று நாவல்கள் என்று அவற்றை அழைக்கலாம். ஆனல் பெயரல்ல முக்கியம்; அவற்றைப் படித்த அநுபவத்தை உரைப்பதுதான் முக்கியம்.

பொதுவாக நாவல், நாடகம், அல்லது திரைப்படம் என்றதும் எம்மவர்க்குக் கதாநாயகன், கதாநாயகி, வில்லன் முதலிய பாகுபாடுகளே பேச்சுப் பொருளாக அமையும். நான் இங்கே குறிப்பிடும் படைப்புக்ளில் ஒன்ருன ஹொன்டத் என்ற நாவலில் நாவலின் பெயர் கொண்ட குக்கிராமத்தில் வாழும் அத்தனைபேரும் பாத்திரங்களாய் வருகின்றனர். அதே சமயத்தில் அத்தனை பேரும் தனிப்பண்புகள் உடையவராயும் விளங்குகின்றனர். ஹொன்டத் கிராமமும் அதன் அயற் கிராமங்களும் அப்பாத்திரங்கள் பிறந்து வளர்ந்து உழைத்துப் போராடி மடியும் ஜீவபூமியாய் எமக்குக் காட்சிதருகின்றன.

இயற்கையின் மத்தியில் வாழ்கின்ற இப்பாத்திரங்கள் வயலோரத்திலும், நதிதீரத்திலும் மலைச்சாரல்களிலும், குகைகளிலும், தென்னந்தோப்புக்களிலும், வைக்கோற் குடிசைகளிலும் இருந்து நடமாடி இயங்குவதைப் பார்க்கும்போது நாவல் என்பதை மறந்து நாமே அவர்களுடன் வாழ்வது போன்ற மெய்ம்மை உண்டாகி விடுகிறது.

கிராமப்புறத்தவர்களான அவர்கள் தொட்டிலிருந்து சுடுகாடுவரையுமுள்ள பற்பல சந்தர்ப்பங்களுக்கும் உரிய நாட்டுப்பாடல்களின் அடிகளை இசைக்கும் போதும் முனுமுனுக்கும் போதும். இலக்கியத்தின் ஊற்றைக்காணக் கூடியதாக உள்ளது. இடைவிடாத போராட்டத்தின் மத்தியிலும் இருபத்து இரண்டு வயதுடைய கான் என்னும் இளைஞனுக்கும், குயென் என்ற பதினேழு வயதுப் பெண்ணுக்கும் காதல் தோன்றி வள


ருகிறது. காதல் வேறு கடமை வேறு என்று வரட்டு வேதாந்தம் பேசாமல் வாழ்க்கையில் அதையும் ஒரு அம்சமாகக் கருதி அவர்கள் இயங்குகின்றனர் காதலேயும் வீரத்தையும் எத்தகைய செயற்கைச் சோடினேகளுமின்றி இயற்கையாகப் பார்க்கும் போதே அவற்றின் உள்ளார்ந்த ஆற்றல் அத்தனேயையும் உணர்கின்ேரும். ஹொ ன்டத் நாவலில் என்னேக்கவர்ந்த பாத்திரங்களில் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லே தூ டொன் என்ற கிழவன் பார்வையிழந்தவன்; எனினும் கூடைகள் பின்னித் தனது பேரப்பிள்ளேயையும் வளர்த்துவருகிருன். கண்ணில்லாத அவனுக்குக் கர்ணுமிதமாகப்பாடும் சக்தியிருந்தது. மக்களும் விடுதலேப் போர் வீரரும் சோர்ந்து போகும் வேளேகளில் அக்கிழவனது நாட்டுப்பாடல்கள் அவர்களுக்குப் புத்துயிரும் பேருக்கமும் அளிக்கின்றன. 'மாமா' என்று கிராமத்தவர் அன்புடன் அழைக்கும் அவன் ஒரு சந்தர்ப்பத்தில், பண்டைய காலத்திலே நாட்டைக்காக்க வீட்டுக்கொரு பிள்ளேயை அனுப்புமாறு பறையறிவிக்கும் செய்தியை வெளிப்படுத்தும் நாட்டுப்பாடல் ஒன்றைப்பாடும் பொழுது கேட்டுக்கொண்டிருந்த ஆக்கிரமிப்புப் படையினருக்கே கண்கள் கலங்கிவிடுகின்றன. இன்னெரு சந்தர்ப்பத்திலே கிழவனின் பேத்தி, "நட்சத்திரங்களின் ஒளிக்காக மீன்கள் காத்திருப்பதுபோன்று, நாட்டை மீட்கும் போருக்கு நீ போனது முதல் செய்திக்காக நான் காத்திருந்தேன்" என்று பொருள்படும் பழையபாடலேப் பாடும்பொழுது இசையின் மந்திரச் சொல்லின்பத்தைப் பாத்திரங்கள் அநுபவிப்பதைப்போலவே நாமும் நாதத்தில் நம்மைப் பறிகொடுக்கிறேம்.

முதலாம், இரண்டாம் உலகப் போர்களின் போது பல்வேறு மொழிகளில் எழுந்த நாவல்களேப் படித்திருக்கிறேன். சோவியத் எழுத்தாளர் ஓஸ்ட்ரோவஸ்கியின் "வீரம் விளேந்த பூமி" தமிழ் மொழிபெயர்ப்பு மூலம் பலர் அறிந்திருக்கக் கூடிய தொன்றே. அந்த நாவலின் ரகத்தையும் தரத்தையும் வேறுபட்ட சூழ்நிலேக்கேற்ப வியத்நாமிய புனேகதைகள் இன்று எமக்கு எடுத்துக்காட்டுகின்றன; தமிழில் இவை பெயர்க்கப்படுவது எத்துணே இன்றியமையாதது என்ற எண்ணத்துடனேயே இந்நாவல்களேப் படித்து முடித்தேன். ★

✣ இன்றைய மாணவர்கள் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு ஏராளமான சாதனங்கள் இருக்கின்றன: வானெலி, பத்திரிகைகள், புத்தகங்கள், சினிமா, பிரயாணம், பல புதிய மனிதர்களின் தொடர்பு இப்படி எத்தனே எத்தனேயோ! இதன் காரணமாக கிணற்றுத் தவளேகளாக இருக்கும் சில ஆசிரியர்களேக் காட்டிலும் சில மாணவர்கள் அறிவாளிகளாக இருக்கிருர்கள்!


✣ கிழக்கு வங்கத்து மக்கள் சுதந்திரப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த வேளையில் இலங்கையிலுள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வந்த முறையைப்பார்த்தால் மிகவும் வெட்கக் கேடாக இருக்கிறது! தம்மைத் தேசிய தினசரிகள் என்று அழைத்துக் கொள்ளும் பெரிய பெரிய பத்திரிகைகள் எல்லாம் மிகவும் கேவலமான முறையில் ஒருபக்கச் சார்பாக, பாகிஸ்தானின் ராணுவ ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகவே செய்திகளை வெளியிட்டு வந்தன! ஆங்கில தமிழ் தினசரிகள் அத்தனையையும் எடுத்துக்கொண்டால் நேர்மையான முறையில் செய்திகளை வெளியிட்ட தினசரிகள் இரண்டே இரண்டுதான்: ஒன்று ''வீரகேசரி''; மற்றது ''ஈழநாடு!'' ஆரம்பத்திலிருந்தே கிழக்கு வங்க மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவாக மிகவும் ஆணித்தரமான முறையில் கருத்துக்களை வெளியிட்டு வந்த ஒரே பத்திரிகை ''சுதந்திரன்!''

✣ மாலைகளில் எத்தனைவகை உண்டு தெரியுமா? இடைவிட்டு இரண்டிரண்டு பூக்களாகக் கட்டியது 'கண்ணி' (சரம்), பல வகைப்பூக்களையும் கலந்து கட்டியது 'கதம்பம்'. பச்சிலைகளைக் கலந்து தொடுத்தது 'படலை' தெரிந்தெடுத்த பூக்களால் தொடுத்தது 'தெரியல்'. சரிகை முதலியவற்றால் செய்தது 'அலங்கல்'. முத்து முதலிய மணிகளால் ஆனது 'ஆரம்'.



✣ எழுத்தாளராக இருந்து பேச்சாளராகி, அரசியல் வாதியாகி, எம். பியானவர் மட்டக்களப்பு ராசதுரை! எழுத்தாளனாக இருந்த ஒருவரால் அந்தத் துறையை எளிதில் மறக்கமுடியாது. ராசதுரையும் இதற்கு விதிவிலக்கல்ல! இவர் விரைவிலேயே ஒரு புதிய சஞ்சிகையை ஆரம்பிக்கக் கூடும் என்று சில குருவிகள் செய்தி சொல்லுகின்றன! இந்தச் செய்தி உண்மையாக இருக்கட்டும்! ஒரு எழுத்தாளனின் தொண்டு மறுபடியும் இந்த நாட்டுக்கு எழுத்தாளன் என்ற முறையில் கிடைக்கட்டும்!

✣ இடையில் நிறுத்திவைக்கப் படாமல் தொடர்ந்து பிடிக்கப் பட்டபோதும் 'ஒளவையார்' படத்தை உருவாக்க ஜெமினி வாசனுக்கு ஏழு வருடங்கள் பிடித்தன. 'மகராசி' என்ற படத்தை எடுத்த தேவர் அதை பதினொரு நாட்களிலேயே முடித்து விட்டார்!



# சிவாஜி கணேசனின் நடிப்பு - என் கருத்து

அ. மகாலிங்கம்

தமிழ்த்திரையுலக வரலாற்றிலே சிவாஜி கணேசனின் தாக்கம் நிலையானது. சிவாஜிகணேசனின் காலம் என்று சில அத்தியாயங்கள் அதில் இடம் பெறப்போவதை எவரும் மறுக்கமுடியாது. சிவாஜிக்கு என்று ஒரு தனிமுத்திரை, ஒரு தனித்துவம் இருப்பதும் மறுக்க முடியாத உண்மை.

சிவாஜியின் திரையுலகப் பிரவேசத்தின் பின்தான் நடிப்புக்கலையின் இலக்கணங்கள் எவையென்பன தெரிந்தன. அவ்விலக்கணத்திற்கு ஒரு நிறைந்த இலக்கியம் உதயமானதும் தெரிந்தது. பாடுவது, அலங்காரமாகத் தோன்றுவது, வசனம் பேசுவது, சண்டை செய்வது என்பவையெல்லாம் நடிப்புக்கலையின் துணை அம்சங்களே தவிர அவை, தனித்தனி நோக்குமிடத்து நடிப்பாகா. நடிப்புக்கலையென்பது இவற்றுடன் கலந்த, ஆனல் இவற்றிலும் மேம்பட்ட தனித்த ஒரு கலை யென்பதைத் தெளிவாக்கியவர்களுள் முதன்மையானவர் சிவாஜிதான். ஒரு பரதனுக (சம்பூர்ணராமாயணம்) ஒரு அப்பராக (திருவருட் செல்வர்) ஒரு ரங்கனுகத் (படிக்காத மேதை) தோன்றி நடிப்புக்கலையின் மிக இனிய சுவைகளை வெளிப்படுத்தினர் சிவாஜி.


சிவாஜியின் நடிப்பு 'ஓவ' ரென்றே (மிகையென்றே) குறைந்ததென்றே இன்று நாம் விமர்சனம் செய்கின்றோம். இப்படி நாம் விமர்சனம் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தியவரும் அவரேதான். நடிப்பு என்றால் என்ன என்ற தரத்தை, அளவு கோலை, அவர் ஏற்படுத்தியபடியால்தான் இன்று நாம் அந்த அளவைக் கொண்டு மற்றவர்களையும் அவரையும் அளக்கின்றோம்.

சிவாஜியின் நடிப்பை அளவிடும் போது ஆண்டுகளின் படி வரைபடம் (Graph) கீறினல் அது ஒரே சீராகக் கீழிருந்து மேல் நோக்கிச் செல்கின்றதென்று கூறமுடியாது. திடீர்

உயர்ச்சிகளையும் மோசமான வீழ்ச்சிகளையும் அந்த வரை படத்தில் நாம் காணலாம். ஒரு உதாரணம் சொன்னால் "ரங்கோன் ராதா" என்ற படத்தில் காணப்பட்ட சிவாஜியின் நடிப்பின் முதிர்ச்சியை, சமீபத்திய அவரது சில படங்களிற் காணமுடியவில்லை. அவரா இந்த நடிகர் என்று கூட நாம் ஆச்சரியப்படலாம்.

இந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு சிவாஜி பொறுப்பானவர் என்றாலும் அவரை மீறிய ஒருகாரணமும் இருக்கத்தான் செய்கிறது. இலேசான கதையும் பாத்திர அமைப்பும் கொண்ட சில படங்கள் வெற்றி பெறுவதைக் கண்ட தயாரிப்பாளர்சிலர்சிவாஜிக்கும் அத்தகைய பாத்திரங்களை அளிக்கின்றனர். கனமான சிக்கலான பாத்திரங்களே சிவாஜிக்கு மிகப் பொருத்தமானவை. சிக்கலற்ற இலேசான பாத்திரங்களில் (Light roles) சிவாஜியின் நடிப்புச் சோபிப்பது குறைவுதான். இது அவருடைய கனமான நடிப்புடன் ஒப்பிடும் போது ஏற்படும் மதிப்பீடாகும். சிவாஜி என்றவுடன் ஆழமான நடிப்பை நாம் எதிர்பார்க்கிறோம். எனவேதான் சாதாரண வேஷங்களில் அவரது நடிப்பை நாம் ரசிப்பதில்லை.

மாறுபட்ட வேடங்களில் நடிக்கும் ஆற்றலும், பாத்திரத்திற்கு உயிரூட்டும் திறனும் சிவாஜியின் பிறவிச் சொத்துக்கள். ரங்கோன் ராதாவில் வரும் வஞ்சக எண்ணம் கொண்ட கதாநாயகனுக்கும், படிக்காத மேதை அப்பாவி ரங்கனுக்கும்,



✤ தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம் இப்போது மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறார். தமிழரசுக் கட்சியின் மாநில மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்காக ஓடியாடி உழைத்துக்கொண்டு இருக்கிறார். எந்த ஒரு எம்பியைக் காட்டிலும் மிகவும் 'பிஸி'யான மனிதராக இருக்கிறார்! பாவம் மனிதர் தேர்தலில் தோற்றுப் போயுங்கூட அவருக்கு நிம்மதியாக இருக்க வழியில்லை! குறுகிய தொகுதி நலன், பிராந்திய நலன் என்பவைபற்றிச் சிந்திக்காமல் பரந்து வாழும் தமிழ்ச் சமுதாயம் முழுவதையும் பற்றிச் சிந்திப்பவர் அமிர்தலிங்கம்! இவர் சென்ற தேர்தலில் தோற்றுப் போனதற்கு இத்தகைய பரந்த மனப்பான்மையும் ஒரு காரணம்!

✤ பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் மகன் சார்ள்ஸ், மகள் ஆன் இருவருக்குமே இப்போது 21 வயதுக்கு மேல் ஆகிவிட்டது. இளவரசர் சார்ள்ஸுடன் சேர்ந்து திரியும் பெண்கள் யார், இளவரசி ஆனுடன் சேர்ந்து திரியும் வாலிபர்கள் யார் என்பதை துப்பறிந்து கண்டுபிடித்து செய்தி வெளியிடுவதில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் இப்போது அதிக அக்கறை காட்டி வருகின்றன.

பாசமலரில் வரும் பாசமுள்ள சகோதரனுக்கும், ராமாயணத்தில் வரும் உத்தமபரதனுக்கும், உத்தமபுத்திரனில் வரும் வில்லனுக்கும், சபாஷ் மீனுவின் நகைச்சுவைக் கதாநாயகனுக்கும். திருவருட் செல்வரான கனிந்த அப்பருக்கும், தெய்வமகனின் மூன்று மாறுபட்ட பாத்திரங்களுக்கும் இடையே எவ்வளவு வேறுபாடுகள், வித்தியாசங்கள்! எந்தப் படத்திலும் சிவாஜியை நாம் காண முடிவதில்லை. தன்னை மறைததுக் கொண்டு பாத்திரமாக மலரும் சிறப்பு அவருடையது. ஆசிய ஆபிரிக்கப் படவிழாவில் பெற்ற பரிசும், மூதறிஞர் இராஜாஜி 'பரதனுககு என வாழ்ததுக்கள்' என்று வாழ்த்திய வாழ்த்தும் சிவாஜியின் உழைப்பிற்கும் உயர்வுக்கும் கிடைத்த பாராட்டுக்கள்.

சிவாஜி, வசனத்திற்காக நடிப்பைக்குறைத்துக் காட்டிய ஒரு காலம் இருந்தது. இன்று அவர் நடிப்பிற்காக வசனத்தைக் குறைத்துள்ளார். ஆனல் வசனத்தை அவர் ஓங்கிய குரலில் பேசும்போது, குரல் அடங்காமல் ஒலிப்பது ஒரு குறை யென நினைக்கிறேன். ஆங்கில நடிகர் கேர்க் டகௗஸ் (Kirk Douglas) எத்தகைய ஓங்கிய குரலில் பேசினுலும் அதிலும் ஒரு அடக்கம் இருப்பதை நாம் காணலாம். சிவாஜியின் நடிப்பு மிகை போலத்தோன்றுவதுண்டு. அது உண்மையில் ஒரு தோற்றமே தவிர நிசமானதல்ல. அவர் நடிக்குமளவு மற்றைய பாத்திரங்கள் மேலெழாவிட்டால் அவரது நடிப்பு மிகை போலத் தோன்றும். தேயிலைச் சாயம் குறைந்தால், வழக்கமான அளவு சீனிபோட்டாலும் தேநீர் திகட்டும். அதுபோன்றதே இதுவும்.

சிவாஜி என்ற கலைஞன், கணேசன் என்னும் மனிதனில் இருந்தே பிறந்துள்ளான் என்பதை நாம் நினைத்துப் பார்த்தால் குறைபாடுகள் இருக்கும் இருப்பது ஏன் என்றும் விளக்கத் தேவையிராது. ஒரே வரியில் சொன்னல்—

நடிப்புக்கலையின் சிறப்புக்களை மிக அதிக அளவில் தமிழ்த் திரையுலகில் வெளிப்படுத்தியவர் சிவாஜி கணேசன் என்று சொல்லலாம். ●




# கேள்வி பதில்!



**யோ. யோகேஸ்வரன்,**
**யாழ் இந்துக் கல்லூரி.**

★ சமீபத்தில் சேலத்தில் நடந்த குடும்பத்திட்ட விழாவில் பேசிய தமிழக சுகாதார அமைச்சர் "ஒரு குழந்தை பெற்றால் போதும். இரண்டு பெற்றால் ஆடம்பரம், மூன்று பெற்றால் பாவம்" என்று மகாத்மா கூறியுள்ளதாகச் சொன்னாரே, இது எந்த அளவுக்கு உண்மை?

கசாப்புக் கடைக்காரனும், கன்னக்கோல்காரனும் கூட இப்போது காந்தியடிகளின் தத்துவங்களைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்கள்! நேர்மையான முறையில் அனுட்டிக்கப்படும் பிரம்மச்சாரியத்தைப் பற்றி காந்தியடிகள் பேசினாரே தவிர, ஒருபோதுமே செயற்கையை சாதனங்களின் துணைகொண்டு செய்யப்படும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அவர் ஆதரித்தது கிடையாது!

**சொல்லின் செல்வன்,**
**கொட்டடி.**

★ திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது என்று சில சினிமா நடிகைகளும் கூறுகின்றார்களே?

சினிமா நடிகைகள் திருமணத்தைப் பற்றிப் பேசுவது சாத்தான் வேதம்படிப்பது மாதிரி இருக்கிறது!

**புதுமை விரும்பி, அளவெட்டி;**

★ கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணனைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

எழுத்தாற்றலை மட்டுமே துணையாகக் கொண்டு ஒரு தமிழ் எழுத்தாளன் பணம், புகழ் ஆகிய இரண்டையும் திரட்ட முடியும் என்பதை செயலாக்கிக் காட்டியவர்! சினிமா நட்



சத்திரங்களைப்போல எழுத்தாளர்களும் பல விசிறிகளைக் கொண்டவர்களாக ஆக முடியுமென்பதை நிரூபித்துக் காட்டியவர்! எவ்வளவுதான் பேசினாலும் எழுதினாலும் கடைசியில் நாட்டுக் கோட்டைச் செட்டிமாருக்கே உரிய இயல்புகளுடன் பணம் பண்ணுவதிலேயே குறியாக இருப்பவர்!

★ ★ ★ ★ ★ "சாமிஜி" ★ ★ ★ ★ ★

சி: டிலிப் அழகிரி, குருநாகல்:

★ கம்யூனிஸத்தை ஒழித்துக் கட்டுவதற்காக பாகிஸ்தானுடன் கூடிக் குலாவிய அமெரிக்கா, இப்போது கம்யூனிஸ்ட் சீனுவுடன் சேர்ந்துகொண்டு இந்தியாவுக்கு எதிராகச் செயல்படுகிறதே, காரணம் என்ன?

தப்புக் கணக்குப் போடுவதில் உலக அரசியல் அரங்கில் அமெரிக்க ஜனுதிபதி நிக்ஸன் தான் இன்று முதல் நம்பர் பேர்வழியாக இருக்கிருர்! சீனுவின் நட்புறவு கிடைத்தால் அமெரிக்காவில் உற்பத்தியாகும் பொருட்களுக்கு ஒரு பெருத்த மார்க்கெட் கிடைக்குமென நிக்ஸன் நினைக்கிருர்!



இந்த மாதிரியான ஒரு புதிய உறவின் மூலம்தான் வீழ்ச்சியடைந்து வரும் அமெரிக்க பொருளாதாரத்தை சரிக்கட்டலாம் என்பது நிக்ஸனின் நம்பிக்கை! ஆனுல், இவரது கொள்கைகள் எல்லாத் துறைகளிலுமே தோல்வி அடைந்துகொண்டுதான் வருகின்றன!

பி: அன்ரனிராஜ், நிலாவெளி.

★ சாவையே விரும்பி தற்கொலைசெய்யும் மனிதன் வெறுப்பது எதை?

விரக்தியின் உச்ச நிலைக்குச் சென்ற மனிதன்தான் தற்கொலையை விரும்பி ஏற்றுக் கொள்கின்ருன். ஒரு வகையான மனே வியாதிதான் மனிதனை தற்கொலை செய்ய தூண்டுகின்றது. சரியான முறையில் வளர்க்கப்பட்ட, கல்வி கற்ற ஒரு மனிதன் ஒரு போதுமே தற்கொலை செய்ய முயற்சி செய்யமாட்டான்.

எஸ். எம். காதர், பொத்துஹர.

★ ஈழத்தில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களுக்கு தாங்கள் கூறும் நல்லாசி யாது?

மெத்த வளரும் கலைகள் அத்தனையும் ஈழத்துத் தமிழ் உலகிலும் செழித்து வளர வேண்டும் என்பதே எனது பேரவா! ஈழத் தமிழர்களின் தன்மான உணர்ச்சியும், தன்னம்பிக்கையும் கலைகளின் வளர்ச்சிக்கு துணை செய்யவேண்டும்! கலைகள் நல்ல முறையில் வளர்ச்சியடைந்தால் ஒரு சமூகத்தின் தன்மான உணர்வும், தன்னம்பிக்கையும் வீறுகொண்டெழும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது!

கே. பஞ்சாட்சரம், உரும்பிராய்.

★ ஒரு அரசியல் வாதியின் இயல்பு எப்போது வெளிப்படுகிறது?

இன்னொரு அரசியல் வாதியின் குணத்தை விமரிசனம் செய்யும்போது!

சி. டிலிப் அழகிரி, குருநாகல்

★ இந்திய சஞ்சிகைகளுக்கும் இலங்கைச் சஞ்சிகைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

அடுத்த வீடு பணக்கார வீடு. அங்கே உள்ள குழந்தைகள் மொழு மொழு வென்று அழகாக இருக்கின்றன; அழகுடன் கெட்டிக்காரத்தனமும் இருக்கின்றது. கொஞ்சம் வயது வந்த குழந்தைகள்! ஆனால், சொந்த வீட்டில் இருக்கும் குழந்தை, வீட்டு நிலைமை காரணமாக எலும்பும் தோலுமாகக் காட்சி தருகிறது. தனது திறமைகளை வெளிக்காட்டக் கூடிய அனுபவமும் முதிர்ச்சியும் சொந்த வீட்டுக் குழந்தைகளுக்கு இன்னமும் வந்து சேரவில்லை! எந்தத் தாயுமே அடுத்த வீட்டுக் குழந்தையைக் காட்டிலும் தனது சொந்தக் குழந்தையைத் தான் அதிகம் பேணி வளர்க்க முற்படுவாள்! அடுத்த வீட்டு அழகான குழந்தைகளுடன் இந்த வீட்டுக் குழந்தை சேர்ந்து பழக வேண்டியதும், சேர்ந்து விளையாட வேண்டியதும் இந்தக் குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியம்!

கே. ராஜநாதன்,
ஊர்காவற்றுறை

★ இந்தக் காலத்து மாணவர்கள் கௌரவக் குறைவான முறையில் நடந்துகொள்கின்றார்களா?

இல்லை! அவர்களைக் கௌரவத்துடன் நடத்தினால் அவர்களும் கௌரவமாகவே நடந்து கொள்வார்கள்!

வசந்த செல்வி இராமநாதர்,
அல்வாய்.

★ "யாஹியாகான்" பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

"வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்"; "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற பழமொழிகள் எவ்வளவு தூரம் உண்மையானவை என்பதை மிகவும் தெள்ளத் தெளிவாக நிரூபித்துக் காட்டிவிட்டாரே இந்தப் பாழும் மனிதர்! பூட்டோவோடு சேர்ந்து கொண்டு மக்கள் தலைவனான முஜிபுர் ரஹ்மானை இவர் எதிர்த்தார்! இப்போது பூட்டோவே இவரது எதிரியாக மாறிவிட்டார்!

எம். காந்தரத்தினம்,
பேராதனை.

★ பாகிஸ்தானின் சிறந்த ராஜதந்திரி யார்?




சிறந்த ராஜதந்திரி பூட்டோவாம்! சிறந்த ராஜதந்திரியின் தரமே இப்படி இருக்கின்றதென்றால் மற்றவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்!

ஏ. எம். முக்தார்,
195, மெசஞ்ஞர் வீதி,
கொழும்பு 12.
(பரிசுபெறும் கேள்வி)

✶✶ மாஜி பிரதமரான டட்லி சேனநாயக்கா, யூ. என். பி. பாராளுமன்றக் குழுவின் தலைவராக ஜே. ஆரை நியமித்ததின் காரணம் என்ன ?

வசதிகளை அனுபவிக்கும் நேரங்களில் பதவியில் ஒட்டிக் கொள்வதும், பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய



நேரங்களில் தட்டிக் கழித்து ஒதுங்கிக்கொள்வதும்தான் டட்லியின் குணம்! அதுவுமல்லாமல், யூ. என். பிக்கு புத்துயிர் அளிக்கக்கூடிய திறமை ஜே. ஆரிடம் மட்டுமே இருப்பதாக பலர் கருதுவதும் காரணமாகும்!

கே. வீரமணி, கிளிநொச்சி.

✶ திறமைகள் பல இருந்தும் நான் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

எதிர் காலத்தில் எதை எதையெல்லாம் நம்மால் செய்யக்கூடும் என்று நம்புகின்றோமோ அதை வைத்து நமது திறமையை நாம் எடைபோட்டுப் பார்க்கிறோம்! மற்றவர்களோ, நாம் ஏற்கெனவே சாதித்ததை வைத்து நம்மை எடை போட்டுப் பார்க்கிறார்கள்! யோசித்துப் பாருங்கள், மற்றவர்கள் உங்களைத் திறமைசாலி என்று சொல்லக்கூடிய அளவுக்கு உங்களது சாதனைகள் இருக்கின்றனவா ?

கே. எம். சாவகச்சேரி.

✶ பதவிகளுக்காக ஆசைப் படுபவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் ?

ஒருவர் எந்தப் பதவியில் இருக்கின்றார் என்பது முக்கியமல்ல! இருக்கின்ற பதவியில் என்ன செய்துகொண்டு இருக்கிறார் என்பதுதான் முக்கியம்! பதவிகள் ஒருவருக்குப் பெருமை தருவதில்லை. மனிதர்கள்தான் தங்கள் சேவையின் மூலம் பதவிகளைப் பெருமைப் படுத்துகின்றார்கள்! ஆனால், துரதிர்ஷ்டவசமாக பதவிகளில் ஒட்டிக்கொள்வதன் மூலம், தங்கள் பெருமைகளை அதிகரித்துக்கொள்ளலாம். என்று நினைக்கின்ற மனிதர்கள்தான் இந்த நாட்டில் நிரம்ப இருக்கின்றார்கள்!

கே. எஸ். நாதன்,
களுவாஞ்சிக்குடி

✶ இந்த நாட்டில் ஏழைகள் வாழ்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறதே ?

கொஞ்சம் பொறுங்கள் - இந்த நாட்டில் மட்டுமல்ல, எந்த நாட்டிலுமே ஏழைகள் தான் கஷ்டப்படுகின்றார்கள்!

ச. ராஜநாயகம், உடுப்பிட்டி:

★ நீங்கள் ஒரு கம்யூனிஸ்டா?

ஆம்! ஆனல் கம்யூனிஸ்ட் கட்சிக்காரன் அல்ல! கம்யூனிஸ தத்துவம் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களின் தனிச்சொத்து அல்ல! கம்யூனிஸ்ட் கட்சிக்கு வெளியே கம்யூனிஸ் தத்துவதத்தில் நம்பிக்கையுள்ள பலர் இருக்கிறுர்கள்! இதைப்போல வே கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளே கம்யூனிஸ தத்துவத்தில் நம்பிக்கையில்லாத பலர் இருக்கிறுர்கள்!

எஸ். சற்குணம், நவாலி.

★ எனது காதலி திடீரென்று என்னுடன் சகோதர உறவு கொண்டாடுகிறுள் அர்த்தம் என்ன?

வேறெங்கோ பசையுள்ள இடத்தில் கண்போட்டு விட்டாள்!

எஸ் குமரன், குருநாகல்.

★ மனிதன் ஏன் பிறந்தான்?

கல்லினுள் தேரைக்கும் கருப்பையினுள் முத்துக்கும் உணவளித்துக் காக்கும் தெய்வம், தன்னை இந்த உலகில் மனிதனுக வாழவிடுமா? என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காக!


கே. ராமநாதன்,
யாழ்ப்பாணம்.

★ தமிழரசுக் கட்சியின் முதல் பகைவன் யார்?

அந்தக் கட்சிக்குள்ளேயே இருந்து கொண்டு மிக மிக குறுகிய புத்தியோடு நடந்து கொள்ளும் சில தமிழரசு எம். பிக்கள்!

எம். உதயன், திருகோணமலை.

★ நடிகை ஜெயலலிதாவின் தாயார் இறந்து விட்டாரே: ஜெயலலிதா தொடர்ந்தும் படங்களில் நடிப்பாரா?



படங்களில் நடிப்பதற்கு அம்மாவின் துணை தேவையில்லை. படமுதலாளிகளுடன் நடிப்பதற்குத்தான் அம்மாவின் துணை வேண்டியிருந்திருக்கும். ஆனல் அம்மாவின் அனுபவத்தைக் காட்டிலும் கூடிய அனுபவம் ஜெயலலிதாவுக்கு இப்போது வந்துவிட்டது. எனவே தொடர்ந்தும் படங்களில் நடிப்பதற்குத் தடையேதும் இல்லை!


சி வசந்தநாதன், கொக்குவில்.

★ சில பெரிய அதிகாரிகள் பென்ஷன் எடுத்த பின்னர், ஒன்றுக்கும் உதவாதவர்களாக இருக்கிறுர்களே?

முன்னரும் அவர்கள் அப்படித்தான் இருந்திருப்பார்கள்! நாம்தான் தப்புக் கணக்குப் போட்டு பதவியில் இருப்பவர்கள் எல்லாரும் உண்மையில் தகுதியானவர்கள் தான் என்ற நினைப்பில் அவர்களைப் பற்றிப் பெரிதாக நினைத்திருப்போம்!

ப. சண்முகம், மட்டக்களப்பு

★ எம். ஜி. ஆருக்கு இப்போது எத்தனை வயது ?



சினிமா உலக மார்க்கண்டேயர் அவர் !

கு. பத்மநாதன்,
வெள்ளவத்தை.

★ இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தால் யாருக்கு லாபம் ?

ஆயுத விற்பனை செய்யும் நாடுகளுக்கு ! அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள்தான் இன்று ஆயுத விற்பனையில் உலகிலேயே முதலிடம் வகிக்கின்றன !

தா. துரைராசா, கண்டி.

★ அறிஞர் அண்ணாவைக் காட்டிலும் ஏதாவது விஷயத்தில் கலைஞர் கருணாநிதி கெட்டிக்காரராக இருக்கின்றாரா ?

ஆம் ! எந்தப் பிரச்சினை பற்றிக் கேட்டாலும் அந்த இடத்திலேயே கருணாநிதி பட்பட்டென்று பதில் சொல்லுவார் ! அண்ணா அப்படி அல்ல தனது தம்பிமாருடன் கலந்து ஆலோசித்தபின்னர்தான் சில விஷயங்களுககுப் பதில் சொல்லுவார் ! அண்ணாவிடம் கொஞ்சம் தன்னம்பிக்கை குறைவு. தன்னம்பிக்கை நிறைந்ததினால் முன்னுக்கு வந்த தலைவர் கருணாநிதி !

வ. சுப்பிரமணியம்,
பருத்தித்துறை.

★ ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்பார்களே ! அதுபோல் சீதனப் பேயால் வாழ்வு இல்லாமல் இருக்கும் பெண்கள் விடும் கண்ணீர் எதனை ஒக்கும் ?

பெருத்த சீதனத்துடன் கலியாணம் செய்து கொண்ட கணவன்மார்கள், தங்கள் மனைவிமார் பெண்களாக இல்லாமல் பேய்களாக இருப்பதைக் கண்டதும் விடும் கண்ணீருக்கு ஒப்பாக இருக்கும் !

ஆர். ராஜசுந்தரன், நல்லூர்.

★ சோறு பெரிதா; மானம் பெரிதா ?

முஜிபுர் ரெஹ்மான் என்ற வீர மனிதனின் வரலாற்றை நீர் கேள்விப்பட்டது கூடக் கிடையாதா ?

ந. சபாரத்தினம்,
யாழ்ப்பாணம்.

★ புதிய அரசியல் திட்டம் எப்போது வரும்?

அது எப்போது வேண்டுமானாலும் வரட்டும்! ஆனால் அதில் என்ன வரப்போகிறது என்பதப் பற்றித்தான் பிரச்சினையாக இருக்கிறது!

என். மகாலிங்கம், சுன்னுகம்.

✶ அடுத்த தேர்தலில் அமெரிக்க ஜனதிபதியாக யார் வெற்றி பெறுவார்கள்?

எட்வர்ட் கென்னடி! இவருக்குத்தான் இப்போது அமெரிக்க மக்களிடையே செல்வாக்கு அதிகம்!

க. பாலகிருஷ்ணன்,
கொழும்பு-12.

✶ முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் முப்பது வயதுக்கு குறைந்த பெண்களுக்குமிடையே உள்ள வித்தியாசம் என்ன?

ஒரு சாரார் கடந்த காலத்தைப் பற்றிய இன்ப நினைவுகளில். வாழ்கின்றவர்கள் மற்றவர்கள் எதிர்காலத்தைப் பற்றிய இன்ப நினைவுகளில் வாழ்கின்றவர்கள்! எந்தப் பெண்ணுமே நிகழ்காலத்தைப் பற்றிய நினைவுகளுடன் வாழ்வது கிடையாது!


வ. செ, நாதன்,
வெள்ளவத்தை.

✶ யாழ்ப்பாணத்துப் பெண்கள் எப்படி தங்கள் வாழ்க்கைத்துணைவனைத் தேர்ந்தெடுக்கிருர்கள்?

தாய், தந்தையர் என்ற தரகர்கள் மூலம் சீதனம் என்ற வலையைப் பயன்படுத்தி!

கே. வி. எஸ். புசல்லாவை.

✶ சிவாஜியும் எம். ஜி. ஆரும் ஒருவருக்கொருவர் ஏட்டிக்குப் போட்டியாக ஏதாவது செய்து தங்கள் புகழை வளர்த்துக் கொண்டு செல்வது போல வேறு யாராவது இப்படிச் செய்கிறார்களா?



ஆம் செய்கிருர்கள்! கருணநிதியும் சோவும்! வெகு விரைவிலேயே 'கருணநிதி மன்ற'ங்களும், 'சோ மன்ற'ங்களும் தமிழ்நாடு முழுவதிலும் தோன்றினலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

---

✣ பெரும்பாலான மனிதர்கள் ஜனவரி மாதம் பிறந்ததும் எப்படி ஒரு "ஓசி" டைரியைக் கிளப்பலாம் என்று என்று துடியாய் துடிக்கிருர்கள். இவர்களுள் சிலர் "ஓசி" டைரி கிடைக்காவிட்டால் விலை கொடுத்து ஒரு டைரியை வாங்கவும் செய்கிருர்கள், ஆனல் வருடம் முழுவதும் ஒழுங்காக டைரி எழுதுவோர் எத்தனை பேர்? தொண்ணூற்றெண்பது வீதமானேரின் டைரியில், வருடம் முடிந்ததும் எடுத்துப்பார்த்தால், ஜனவரி மாதக்கைத் தவிர எஞ்சிய மாதத்துப் பக்கங்கள் அத்தனையும் காலியாகத்தான கிடக்கும்!

எஸ். எஸ்., மூளாய்:

★ மாவோ என்ன செய்கி றார்?



மாவோவின் முதல் எதிரி சோவியத் யூனியன் தான்! வங்காள தேசம் உதயமான நாளிலிருந்து ஆசிய நாடுகளில் சோவியத் நாட்டின் செல்வாக்குத்தான் பெருமளவு மேலோங்கி இருக்கிறது! ஆசிய நாடுகளில் தனது செல்வாக்கை எப்படி வளர்த்துக் கொள்ளலாம் என்பது தான் இப்போது மாவோவின் சிந்தனையாக இருக்கிறது!

செல்வி எம். யூ. எஸ். பரீதா
வாழைச்சேனை.

★ மனிதர்கள் தற்கொலை செய்வதற்குக் காரணம் என்ன?

பிறரை அடக்கி ஆள்கின்ற அதிகார மனப்பான்மை கொண்டோரின் மனோபாவம் அவர்களை நோக்கியே பிரயோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களிலேதான் தற்கொலை நிகழ்ச்சிகள் சம்பவிக்கின்றன.

கிங்ஸ்லி ஜெயராஜா,
நவாலி தெற்கு:

★ இலங்கைத் தமிழர் ஒருவர் அமெரிக்காவில் இருக்கும்போது அங்கு ஓர் இலங்கைச் சிங்களவரையும், ஒரு இந்தியத் தமிழரையும் சந்தித்தால் யாரைச் சந்தித்ததில் அவருக்குக் கூடிய மகிழ்ச்சியாக இருக்கும்:

இலங்கைத் தமிழர் 'கோப்பி'ப் பிரியரா அல்லது 'தேநீர்' பிரியரா என்பதைப் பொறுத்த விஷயம் இது! ஏனென்றால் இந்தியத் தமிழர்கள் ''கோப்பி'ப் பிரியர்கள்; இலங்கைச் சிங்களவர்கள் 'தேநீர்' பிரியர்கள்! இன்னும் சிலர் இருக்கிறார்கள்! வேறுபானங்களை நாடுபவர்கள்! அந்தப் பானங்களை நாடுபவர்களின் 'நிலையில்' இந்த வேறுபாடுகள் தோன்றுவதில்லை!

மு. பாலு, உடுவில் தெற்கு,

★ பெண்களுக்கும் ஆண்களுக்கும் படமாளிகையில் மேல் வகுப்புக்களில் சமஉரிமை அளிக்கப்பட்டுள்ளது. கலரியிலும் சம உரிமை அளித்தால் என்ன?

கலரியில் சம உரிமை அளித்தால், திரையில் எம். ஜி. ஆரோ அல்லது சிவாஜியோ தோன்றும்போது, தியேட்டருக்குள் கைதட்டல் சத்தம் கேட்காது! கைகள் ஜோடி சேர்ந்திருக்கும்!

ஏ. வி. நாகலிங்கம்,
தெல்லிப்பழை.

★ வெள்ளத்தால் சாகாது, வெந்தணலால் வேகாது, கள்ளற்கோ மிக அரிது, காவலோ மிக எளிது—அது யாது?


ஒருவன் பெற்ற கல்வி

✣ இலங்கையில் இடதுசாரி இயக்கம் தொடங்குவதற்கு முன்னோடியாக இருந்த 'சூரிய மல் இயக்க' காலந்தொடக்கம் இலங்கை அரசியலில் ஒரு புரட்சிகர சக்தியாக விளங்கிவந்த றெபேட் குணவர்த்தனு சமீபத்தில் காலமாகி விட்டார். இவரைப் போன்ற அசாதாரண துணிச்சல் மிகுந்த தலைவர்கள் இலங்கை அரசியலில் அருமையிலும் அருமை! நீண்ட காலமாக இவர் தோளோடு தோள் நின்று கட்டி வளர்த்த சமசமாஜ இயக்கத்தினின்றும் பிரித்து கடையாக் காலத்தில் யூ. என். பியுடன் ஒட்டி உறவாடச் செய்ததும் இவரது இந்த அசாதாரண துணிச்சல்தான்! சமசமாஜக் கட்சியிலேயே இவர் தொடர்ந்து இருந்திருந்தால் அமைச்சர் பதவி கூட இவரை வந்தடைந்திருக்கும்! அமைச்சர்களாக இருந்தவர்கள் பலர் அந்தப் பதவிக்காலம் முடிந்தவுடனேயே 'அட்ரஸ்' இல்லாத பேர்வழிகளாகப் போய்விடுவது உண்டு! ஆனல் றெபேட்டோ இலங்கை வரலாற்றில் தனியிடம் பிடித்துக்கொண்ட ஒரு தலைவராவார்!

✣ சில கோயில்கள் மிகப் பெரியவையாக இருக்கின்றன. ஆடம்பரமான பல காரியங்கள் அங்கு நடைபெறுகின்றன. ஏராளமான மக்கள் கூடுகின்ருர்கள். வேறு சில கோயில்கள் மிகவும் சிறியவையாக இருக்கின்றன; அதிக விளம்பரம் பெருதவையாக இருக்கின்றன. ஆனல் இப்படிப்பட்ட சில கோயில்களுக்குள் நுழைந்தவுடனேயே தன்னையறியாத ஒரு பக்தி உணர்வு நமது நெஞ்சில் வந்து நுழைந்துவிடுகின்றது. கோயில்கள் பெரியவையாகவோ அல்லது சிறியவையாகவோஇருப்பது முக்கியமல்ல. ஒரு மனிதனின் பக்தி உணர்வை அவை எவ்வளவு தூரம் தூண்டுகின்றன என்பதுதான்முக்கியம்.



✣ நடிகர் பாலையா ஒரு 'ரேஸ்' பிரியர். கிண்டியில் குதிரைப் பந்தயம் தொடங்கி விட்டால் இவருக்கு குஷி பிறந்துவிடும். சினிமா 'சூட்டிங்' கைக்கூடரத்துச் செய்துவிட்டு குதிரைப் பந்தயத்துக்குப் போய்விடுவார். சொந்தத்தில் ரேஸ் குதிரைகூட வைத்திருந்தார். இது ஒரு காலம். இப்போது நிலைமை வேறு. இப்போது இவர் குதிரைப் பந்தயம் நடக்கும் பக்கமேதலைகாட்டுவது கிடையாது. காரணம் என்ன? வயதாகிவிட்டது ஒரு காரணம்! வசதியில்லாமல் போய்விட்டது இன்னொரு காரணம்!



[illegible] பெருமையோடும் யாழ்ப்பாணத்தவர்களால் குறிப்பிடப்படும் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் மிகச் சமீப காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு 'விகடகவி' அவரைப்பற்றிய அனேக சுவையான சம்பவங்களுள் ஒன்றைப் புதையலெடுத்துத் தருகிறார் நமது 'இரசிகமணி'

# விந்தை வழக்கு

✠ **இரசிகமணி கனக. செந்திநாதன்**

● செறம்பான் பொலீஸ் கோட்டில் மெஸ் A. T. இராசாவுக்கும், நகைச்சுவைப் புலவர், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையவர்களுக்கும் நடந்த வழக்கு இது.

1926ஆம் ஆண்டு-இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன் நடந்த ருசிகரமான வழக்கு.

இந்த வழக்கின் விபரம் முழுவதும் ''விந்தைவழக்கு'' என்னும் நூலாக (16 பக்கத்தில், பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் நகைச்சுவை - இரட்டுற மொழியின் திறன்-துணிவு - ஆகியவற்றை அறிய இந்தநூல் உதவுகிறது.

எதற்காக வழக்கு என்பதை அறிந்தால் பிரமிப்பீர்கள். விஷயம் இவ்வளவுதான்.

ஆசுகவி வேலுப்பிள்ளையவர்கள் பலவருடங்களாகச் ''சுதேச நாட்டியம்'' என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை நடாத்தினர்.

தமது பத்திரிகையை ஈழத்தில் மாத்திரமல்லாமல் மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கும் அனுப்பினர், பின்னர் 1926ஆம் ஆண்டில் அப் பத்திரிகைக்கான சந்தாவைப் பெற்றுக்கொள்வதற்காக மலேசியாவுக்குப் போய்ச்சேர்ந்தார்.

பலர் அவரை வரவேற்று மதிப்புச் செய்தனர்.

ஆனல் ஒரே ஒருவர், A. T இராசா, பணத்தைக்கொடுக்கவுமில்லை மதிப்புச் செய்யவுமில்லை, இரண்டுமுறை அவரைச் சந்திக்கப் புலவர் அவர் வீடு தேடிப் போனர். ஏமாற்றந்தான் மிஞ்சியது.

மூன்றும் முறையும் புலவர் அவ்வீட்டுக்குச் சென்றர்.

அவ்வீட்டு வேலையாள் 'முதலாளி வீட்டில் இல்லை' என்று கூறினன்.

புலவர் ஒரு நாற்காலியில் இருந்தார்.

வேலையாள் அவ்வீட்டின் முகப்பில் தூக்கியிருந்த ஒரு விளம்பர அட்டையை எடுத்து வந்து புலவருக்குக் காட்டினான். அதில் எழுதியிருந்தது இது:-

''காசு தண்டலுக்காய் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவரானாலுஞ்சரி, வந்து உள்ளூரில் வசிக்கிறவரானாலுஞ் சரி நம்ம கிரகத்தினுட் பிரவேசிக்கப்படாது''

புலவர் அந்த வசனத்தின் கீழே பார்த்தார்.

தாயுமானவர் பாடல் ஒன்று மின்னியது.

பாடல் இது:-

''எவ்வுயிரு மென்னுயிர்போ
லெண்ணி யிரங்க வுனின்
தெய்வ வருட் கருணை
செய் வய் பராபரமே''

புலவருக்கு ஒன்றுக்கு ஒன்று பொருத்தமாகப்படவில்லை. ஒன்று கருமித்தனம், 'மற்றது இரக்கம்.' இதை ஏன் எனக்குக் காட்டுகிறாய்? என வேலையாளைக் கேட்டார்.

''யார் வந்தாலும் இதைக் காட்டும் படி முதலாளி சொன்னார்'' என்றான் வேலையாள்.

''எனக்குமா?'' என்றார் புலவர்.

''ஆமாம்'' என்றான் வேலைக்காரன்.

புலவருக்குக் கோபம் பீறிட்டு விட்டது.

அவர் அந்த விளம்பரத்தின் மறுபக்கத்தைப் புரட்டினார். பின் வரும் பாடலை எழுதினார்.

''தட்டி யுண்ணுஞ்
செட்டியிடம்
தண்டுபவர் இங்கிருந்தால்
மட்டி யவரென்றே
மதிப்பேன் பராபரமே''

புலவர் புறப்பட்டு விட்டார்.

வீட்டு எஜமானராகிய A.T. இராசா வீட்டுக்கு வந்ததும் வேலையாள் அதைக் காட்டினார்.

# 'இலக்கியச்செல்வர்'
# இரசிகமணி

நண்பர் இரசிகமணி கனக செந்திநாதன் பக்கத்தில் வந்தாரானால் ஒரு மணம் வீசும். அது இலக்கிய மணம். மலரை விட்டு எப்படி மணம் விலகுவதில்லையோ, அதேபோல, இரசிக மணியை விட்டு 'இலககியம்' பிரிவதேயில்லை. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இலக்கியத்தைத் தொட்டு, அன்று தொடக்கம் இன்றுவரை அதை விட்டுப் பிரியாமல் இருக்கிற ஒரு சிலருள் இவர் ஒருவர்! இலக்கியம் என்ற பெயரால் தமிழில் வெளிவருகிற அத்தனையையும் தேடிப்பிடித்துப் படித்து அவற்றுள்ளே நல் முத்துக்களைத் தெரிந்தெடுக்கிற இரசிகர் இவர் 'நடமாடும் நூல் நிலையம்' என்று இவரைக் குறிப்பிட்டுவந்த இலக்கிய நண்பர்கள், பிறகு 'இரசிக மணி' என்ற மிகப் பொருத்தமான பட்டத்தையே சூட்டி மகிழ்ந்தார்கள். இத்தனை காலமும் ஆசிரியத் தொழிலையும் ஆற்றிவந்த நண்பருக்கு கடந்த டிசம்பர் மாதத்துடன் அதிலிருந்தும் விடுதலை கிடைத்து விட்டது. எதிர் வரும் 15-1-72ல் தெல்லிப்பழைக் கலைப்பெரு மன்றத்தினர் இவருக்கு 'இலக்கியச் செல்வர்' என்ற மகுடத்தையும் சூட்டுகின்றனர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அந்த மகுடத்தை இவர்மீது புனையவிருக்கிறார். பண்டிதமணி, இரசிகமணியின் ஆசிரியர் மட்டுமல்ல; நல்ல இலக்கியத் தோழருமாவார்!

தன்னைத் 'தட்டியுண்ணும் செட்டி' எனப் புலவர் கீழ்த் தரமாக எழுதியது அவருக்குப் பெருங்கோபத்தை விளைவித்து விட்டது.

'விட்டேனாபார் அவரை!' என இராசா அவர்கள் வழக்குத் தொடுத்தார்.

மூன்று குற்றங்களைப் புலவர் மீது சுமத்தினார்.

இந்த வினோதமான வழக்குப் பலமாதங்கள் நடைபெற்றது. புலவர் பல பெரியோர்களின் உதவியுடன் அந்த அன்னிய நாட்டிலே துணிவுடன் வழக்கை நடாத்தினார்,

வழக்காளியின் நியாயதுரந்தரர் கேட்ட கேள்விகளுக்கு நகைச்சுவையோடும் - தர்க்கத் திறமையுடனும் அவர் கொடுத்த பதில்கள் அருமையானவை. ஒருசந்தர்ப்பத்தில் தாம் எழுதிய கவிதைக்கு அவர் கொடுத்த விளக்கம் மிக அருமையாக இருக்கிறது.

கேள்வி:- 'தட்டியுண்ணும் செட்டி' என்பதற்கு நீர் நினைத்தெழுதிய கருத்தென்ன?

பதில்:- தட்டி என்பது மறுத்து உண்ணும் - சாப்பிடும்; செட்டு- செட்டுத்தனம் (செட்டி - செட்டுத்தன முள்ளவன்). பிறர்க்குக் கொடாதுண்பதில் இலாபம் இருப்பதாயெண்ணிப் பிறர்க்குக் கொடுக்க மறுத்துத் தானே தனித்துண்ணும் செட்டுக்குண முடையவன் என்பது. 'இ' தொழிற்பேர் விகுதி. செட்டி- வாணியன்; வணிகன் ஒத்த பொருட்பதம். இதைவிட தட்டியுண்ணும் செட்டு என்பது தட்டார், கன்னார், கொல்லர் மேளகாரர் செய்யும் தொழிற்கும் சொல்வது பொருந்தும்.

இந்த வழக்கைத் தீர்த்த நீதிபதி பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:-

''எதிரி படித்தவரும் ஒரு புலவருமானபடியால் இருபொருள் உள்ளதாய் இந்தப்பாட்டை எழுதினார் என்றே நான் நம்புகின்றேன். அதன் கருத்து வழக்காளி சொல்லுகின்ற அளவில் வழக்காளியைத் தாக்கக் கூடியதென்று நான் எண்ணவில்லை. எதிரிமதிக்கப்படத்தக்க ஒருவர் என்பதை நான் நம்புகிறேன். பாட்டுக்கு எதிரி கொடுக்கும் கருத்து பொருத்தமுள்ளதாயினும் அவர் அதை எழுதும் பொழுது வழக்காளியைப் பகிடி பண்ணும் கருத்து வைத்தே எழுதினாரென்பதே நம்பத்தக்கது. அதை நானொரு நிந்தையாய் வழக்காளியைத் தாக்குவதாய் நினைக்கவில்லை. ஆனால் வழக்காளியின் போட் பலகையில் வழக்காளியின் உத்தரவில்லாமல் எதிரி எழுதினதற்காக வெள்ளி 25ஐ ஒரு சிறு குற்றமாக விதிக்கிறேன்''

வழக்கு முடிகிறது. வேலுப்பிள்ளைப்புலவர் அவ்விடத்திலேயே தமக்கு உதவியபெருமக்களுக்கு உணர்ச்சிதப்பும் சொற்பொழிவொன்றை ஆற்றுகிறார்.

இன்னொரு புதுமை! கோலம்பூரில் இருந்து வெளிவந்த தமிழ் நேசன் என்றபத்திரிகை 'நீதிபதி குற்றம் சாட்டி 25 வெள்ளி அபராதம் விதித்ததில் நியாயம் தவறி விட்டார்' என்று எழுதியிருந்தது!

ஆங்கிலம் பயிலும் மாணவருக்கு

மிகச் சிறந்த

உதவி நூல்:

வரதரின்

# மாணவர் அகராதி

[ஆங்கில - ஆங்கில - தமிழ்]

VARATHAR

# STUDENT'S DICTIONARY

**( English - English - Tamil )**

**விலை ரூபா 5/—**


வரதர் வெளியீடு,

226, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

✣ திரைப்படம் பார்க்கும் போது கண்களை நம்பக் கூடாது, கண்ணுக்கு முன்னால் தெரிவது அத்தனையுமே போலி தான்! இதேபோல காதுகளை நம்பக்கூடாத நேரமும் ஒன்று உண்டு. அரசியல்வாதிகளின் பேச்சுக்களைக் கேட்கும்போது காதுகளை அத்தனையுமே பொய்யும் புளுகுமான வார்த்தைகள் தான்!


✣ சென்ற டிசம்பர் 8ம் தேதியன்று முதுபெருந் தலைவர் ராஜாஜிக்கு 93 வயது நிறைந்து 94-ஆவது வயது தொடங்கியிருக்கிறது. இவருடைய 93 வயது பூர்த்தியை ஒட்டி ''கல்கி'' அதிபர் சதாசிவமும் வேறு பல பிரமுகர்களுமாகச் சேர்ந்து அருமையான ஒரு மலரை தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள். இதில் ராஜாஜியைப் பற்றிய ஏராளமான கட்டுரைகளும், சுவை



யான தகவல்களும் அடங்கியிருக்கின்றன. இந்த மலரை மிகவும் பிரமாதமான முறையில் இந்தியாவிலுள்ள பெரிய நகரங்களில் எல்லாம் ஒரே சமயத்தில் வெளியிடவேண்டும் என்பதுதான் ஆரம்பத் திட்டமாக இருந்தது. ஆனால் இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தின் காரணமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. எனவே, வர்தா நகரை ஒட்டிய பவ்நார் ஆசிரமத்தில், பண்டைக் காலத்து ரிஷி முனிகள் வாழ்ந்த நிலையை நினைவூட்டும் சூழலில், வினோபா அடிகளின் பிரார்த்தனைக் கூட்டத்தில் இம் மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. மனத்தூய்மை இல்லாத பல்லாயிரக்கணக்கானோருக்கு முன்னால் இம் மலரை வெளியிடுவதைக் காட்டிலும், தவமுனிவரான வினோபாஜிக்கு முன்னால் இம்மலர் வெளியிடப்பட்டிருப்பதே உண்மையில் ராஜாஜியின் உள்ளத்துக்குத் திருப்தி தருவதாகும்!

✣ தேனீ கடித்த ஒரு மனிதன் பிற தேனீக்களின் கவனத்தையும் கவர்ந்து விடுகிறான்; அவையும் அதே இடத்தில் அவனைக் கொட்டி விடுகின்றன. ஏன்? பல்வேறு வாசனைப் பொருட்களின் உதவியால் தேனீக்கள் பரஸ்பரம் ஜாடை காட்டிக் கொள்கின்றன. அந்தப் பொருள்களின் வாசனை மனிதனுக்குத் தெரிவதில்லை. ஆனால், தொலைதூரத்திலேயே அவை தேனீக்களுக்குத் தெரிந்து விடுகின்றன. முதன் முதலாகக் கொட்டிய தேனீ தான் கொட்டிய இடத்தில் இந்த வாசனையின் ஒரு பகுதியை விட்டுச் செல்கின்றது. அந்த வாசனையானது பிற தேனீக்களைக் காந்தம் போல கவர்ந்து விடுகிறது. ஆகவே, மற்ற தேனீக்களும் அந்த ஆளை அதே இடத்தில் கொட்டுகின்றன!

✣ சில மனிதர்களைப் புகழ்ந்து ஏதாவது சொல்லவேண்டிய நேரங்களில் அந்த மனிதரிடம் இல்லாத பொல்லாத சிறப்புக்களையெல்லாம் சொல்லி அவரை இந்திரன் சந்திரன் என்றெல்லாம் வர்ணிப்பது நம்மில் சிலரிடையே வழக்கமாக இருந்து வருகிறது. இது ஒரு தவறான வழக்கம், ஒரு மனிதனிடம் இல்லாத சிறப்புக்களை அவனிடம் இருப்பதாகக் கூறிப் பாராட்டுவது அவனைக் கேலி செய்வதற்கு ஒப்பாகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது!






✣ இஸ்ரேல் நாட்டை முற்றாக அழித்து ஒழித்துவிடத் துடித்த அரபு நாடுகளை தனது படைபலம் கொண்டு அடக்கி வெற்றி கொண்டு அடக்கி வெற்றி கொண்டிருக்கிறார் இஸ்ரேல் நாட்டுப் பிரதமரான கோல்டா மேயர் இந்தியாவைத் துச்சமாக மதித்து போரில் குதித்த பாகிஸ்தானுக்கு தகுந்த பாடம் புகட்டியிருக்கிறார் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி. மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை பலாத்காரமாகக் கவிழ்க்க முயன்ற பயங்கரவாதிகளை அடக்கி நாட்டுக்கு ஏற்படவிருந்த நாசத்தைத் தடுத்திருக்கிறார் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ. உலகிலுள்ள மூன்று பெண் பிரதமர்களுமே வெற்றித் திருமகள்களாகத்தான் திகழ்கிறார்கள்! பெண்கள் ஆண்களைவிடக் கெட்டிக்காரர்கள் என்பதைக் காட்டுவதற்கு இது போதாதா என்று கேட்கிறார் பெண்கள் விடுதலை இயக்கப் பிரதிநிதி ஒருவர்!

✣ அறிவு குறைந்தவர்கள் குற்றஞ் செய்தவர்களைத் தண்டிக்கத் துடிக்கிறார்கள். அறிவு மிகுந்தவர்கள் பிறர் செய்த குற்றங்களை மன்னித்து மறக்கின்றார்கள். தண்டிக்கப்பட்டவர்கள் பயந்தவர்களாக மாறுகிறார்களே தவிர, திருந்தியவர்களாக மாறுவது கிடையாது. ஆனால் மன்னிக்கப்பட்டு அன்பு செலுத்தப்பட்டவர்களோ திருந்தி உயர்ந்து விடுகிறார்கள்!

✣ சினிமா நடிகையான ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியாக மலையாளப் பட உலகில் பெரும் புகழ் பெற்றிருக்கும் நடிகை ஷீலா இருக்கிறார். நடிகை ஜெயலலிதா எப்போதாவது சினிமா பார்க்க விரும்பினால் ஷீலாவையும் கூட்டிக்கொண்டுதான் செல்வது வழக்கம்; சினிமாவுக்கு மட்டுமல்லாது வேறு எங்காவது செல்வதானாலும் இவர்கள் இருவரும் சேர்ந்தே செல்கிறார்கள். ஷீலா திருமணமானவர்; ஜெயலலிதா திருமணமாகாதவர்! ஷீலாவைப் பொறுத்த மட்டில் அவரது கணவனுடன் சேர்ந்து சுற்றித்திரிவதைக் காட்டிலும் ஜெயலலிதாவுடன் சேர்ந்து சுற்றித் திரிவதையே அதிகம் விரும்புகிறார்!

✣ ஜப்பான் நாட்டில் ஒரு புதிய மோட்டார் காரைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இந்த மோட்டார் கார் குடிகாரர்கள் ஓட்டினால் ஒரு அங்குலம் கூட அசையாது. மது அருந்தியவர்களின் மூச்சுக் காற்றுப்பட்டதும் இயங்கி மோட்டார் காரை செயலற்றதாக்கி விடும் சாதனம் ஒன்று இந்த வண்டிகளில் பொருத்தப்பட்டு இருக்கிறது. இந்தச் சாதனத்தை இறக்குமதி செய்து இங்குள்ள இ. போ. ச. பஸ்களில் பொருத்தினால் நன்றாக இருக்கும்!

✣ ஒரு குழந்தையின் வாழ்வில் முதல் சில ஆண்டுகள் மிக மிக முக்கியமானவை. இக் காலத்தில் புரதம் நிறைந்த சத்துணவை குழந்தைக்குக் கொடுக்கவேண்டியது அவசியம். புரதச் சத்தற்ற உணவை உட்கொள்ளும் குழந்தைகள் உடல் வளர்ச்சியில் மட்டுமன்றி மனவளர்ச்சியிலும் பின் தங்கி விடுகின்றன. பிற்காலத்தில் அவர்கள் நுண்ணறிவு குறைந்தவர்களாவும், உடலுழைப்புக் குறைந்தவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். இத்தகைய மக்களைக்கொண்ட நாடு எப்படியிருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. இலங்கையில் இப்போது குழந்தைகளுக்கான சத்துள்ள உணவுகள் கிடைப்பதில்லை. இந்நிலை நீடிக்குமானால் எதிர்கால இலங்கை மிகவும் பின்தாங்கிய நாடாகவே இருக்கும்!

✣ அமெரிக்க இளைஞர்கள் பலர் இப்போது இந்து மதத்தைப் பற்றியும், யோகக் கலை பற்றியும் அறிவதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக இந்துச் சாமியார்கள் பலருக்கு அமெரிக்காவில் நல்ல மதிப்பு ஏற்பட்டு இருக்கிறது; ஆனால் இந்தச் சாமியார்கள் அங்கு வாழ்வது இந்த ஊர் பரதேசிச் சாமியார்கள் மாதிரி அல்ல! பெரிய மகாராஜாக்கள் மாதிரித்தான் இவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள்! வேண்டிய வசதிகள் எல்லாம் இவர்களுக்கு அங்கே கிடைக்கின்றன!

நம்பிக்கை

நாணயம் மிக்க

## தங்க, வைர நகைகளை

வாங்கவும்

***நீங்கள் விரும்பிய டிசைன்களில்***

ஓடர் கொடுக்கவும்

ராணி


ஆபரண மாளிகை

கண்கவர் டிசைன்களை கவர்ச்சிகரமாக அமைக்கிறார்கள்,

# RANEE JEWELLERS

224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

✣ அழகும், ஆடல் கலையும் நிரம்பிய லீலா நாராயணன் நடித்துள்ள "குத்துவிளக்கு" திரைப்படம் இன்னும் சில தினங்களில் திரைக்கு வரவிருக்கிறது! 'குத்துவிளக்கு' திரைப்படம் ஈழத்துத் தமிழ் சினிமா உலக முன்னேற்றத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமையும் என்பது அதனோடு தொடர்புடையவர்களின் கருத்து! இத் திரைப்படம் வெளிவந்ததும் லீலாவுக்கும் ஒரு "ஸ்டார் வால்யூ" கிடைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை! கொழும்பு சென்ட் ஜோஜப்



பாடசாலையிலும், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியிலும் கல்வி பயின்றவர் லீலா! தனது பள்ளிப்படிப்பு முடிந்த பின்னர் சென்னை சென்று குருகுல முறையை மேற்கொண்டு முறையாகப் பரதநாட்டியம் பயின்ற லீலா முதன் முதலில் சினிமாவில் தோன்றியது 'மஞ்சள் குங்குமம்'' என்ற படத்தில்! கிங்ஸ்லி செல்லையாவினால் தயாரிக்கப்பட்ட அந்தப் படத்தில் ஒரு நடனக் காட்சியில் மட்டுமே இவர் தோன்றினார்! இவர் கதாநாயகியாகத் தோன்றி நடித்துள்ள முதல் சினிமா ''குத்துவிளக்கு!''

தமிழ் ஆங்கிலம் மலையாளம் ஆகிய மூன்று மொழிகளிலும் மிகவும் சரளமாக உரையாட வல்லவரான லீலா இப்போது யாழ்ப்பாணத்தில்தான் வாழ்ந்து வருகிறார்.

யாழ்ப்பாணத்து மக்கள் மிகவும் பழைமை வாதிகள். அதிலும் பெண்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம், இசை, நடனம் என்ற துறைகளில் தொழில் முறையில் ஈடுபடும் யாழ்ப்பாணத்துப் பெண்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஆனால் எந்த ஒரு சமுதாயமுமே மாற்றங்களுக்கு உட்படாமல் இருக்கப்போவது கிடையாது. இதற்கு யாழ்ப்பாணத்துப் பெண்கள் சமுதாயமும் விதிவிலக்கல்ல!


"குத்துவிளக்கு" திரைப்படம் வெற்றியடைந்து அதன் பயனாக லீலா நாராயணனுக்கு ஒரு "ஸ்டார் வால்யூ" கிடைக்குமேயானால், யாழ்ப்பாணத்துப் பெண்கள் மத்தியில் ஏற்படக்கூடிய திருப்பத்துக்கான கருவியாக இவரே விளங்குவார்!

✣ இப்போதெல்லாம் சினிமா உலகில் சில பிரபல நடிகர்களின் செல்வாக்கே ஓங்கி நிற்கிறது. அவர்கள் ஆட்டுகிறபடி தான் டைரக்டர்கள் கூட ஆட வேண்டியிருக்கிறது. ஆனால் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் 'டைரக்டர்' என்றால் நடிகர்களுக்கு சிம்ம சொப்பனம்! மாணவர்களுக்கு பிரின்ஸிப்பால் எப்படியோ அப்படி! டைரக்டர் பக்கத்தில் இருக்கிறாரென்றால் நடிகர்கள் தங்களுக்குள் அனாவசியமாகக் கதைக்கக் கூட மாட்டார்கள்; காலம் எப்படி மாறிவிட்டது!

✶ இலங்கை வெகு விரைவி லேயே குடியரசாகப் போகிறது! அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வாவினுல் தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் திட்டம் அரசியல் நிர்ணய சபையின் பரிசீலனைக்காக இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது! தங்களுடைய குறைந்த பட்சக் கோரிக்கைகளுக்குக் கூட இடமளிக்க மறுத்த காரணத்தால் தமிழ் மக்களைப் பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழரசுக் கட்சியினர் ஏற்கெனவே அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளி நடப்புச் செய்திருக்கிருர்கள். ஆனுலும் அரசாங்கத்துக்குப் பேராதரவு தரக்கூடிய பெருமளவு எம். பிக்கள் அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகிப்பதனுல் இத் திட்டம் வெகு கோலாகலமாக நிறைவேற்றப்பட்டு விடும் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை! இந்த அரசியல் திட்டத்தில் ஒரு விசேஷம் என்னவென்ருல் இது முற்று முழுதாக சிங்கள மொழியிலேயே தயாரிக்கப் பட்டிருக்கிறது. இது அரசியல் நிர்ணய சபையில் தாக்கல் செய்யப்பட்ட அதே தினத்திலேயே இதனுடைய தமிழ் மொழிபெயர்ப்பும் அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது! இதற்காக அமைச்சர் கொல்வினை எவ்வளவு பாராட்டினுலும் தகும்! மிகவும் கனமான விஷயங்களை-சட்டம், மருத்துவம் விஞ்ஞானம் போன்ற மிகவும் பாரதூரமான நுண்ணறிவுடன் அணுகவேண்டிய விஷயங்களை சிங்கள, தமிழ் மொழிகளில் கூற முடியாது என்று நம்புகின்றவர்கள் இந்த நாட்டில் ஏராளமாக இருக்கின்ருர்கள்! இப்படி நம்புகின்றவர்களில் பலர். ஆங்கிலக் கல்வியின் காரணமாக ஒரு அடிமை மனேபாவத்துக்கு ஆட்பட்ட இந்தக் கனவான்களின் நம்பிக்கை அர்த்தமற்றது என்பதை நிருபித்துக் காட்டியிருக்கிருர் அமைச்சர் கொல்வின்!



✤ பிரபல ஹிந்தி நட்சத்திரமாகத் திகழ்ந்த நர்கீஸ் திருமணம் செய்து குழந்தைகள் பிறந்த பின்பும் நடித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவருடன் அவருடைய மூத்த மகன் சஞ்சய்யும் ஸ்ரூடியோவுக்குச் சென்றிருந்தான். நர்கீஸ் ஒரு காதல் காட்சியில் அன்று நடித்தார். தன்னுடைய அம்மா அன்னிய ஆடவனுடன் கட்டி அணைத்து விளையாடுவதைக்கண்ட சஞ்சய்க்கு தாய் மீது வெறுப்பு வந்து விட்டது. அம்மாவோடு பேசுவதையே சில நாட்கள் நிறுத்திவிட்டான்! சினிமாவில் நடித்துப் புகழும் பணமும் சம்பாதிப்பதைவிட, தமது பிள்ளைகளின் அன்பைச் சம்பாதிப்பதையே பெரிதாக நினைகிருர் நர்கீஸ்!



# கீதா

## "சுகுமாரன்"

நான் ஒரு 'ஸைகாலஜிஸ்ட்', பெரிய வட்டாரங்களில் பிரபலமாயிருக்கிற மனிதன். கௌரவமாக உலவுகின்ற மனிதன். மன நோயாளிகளுக்கு டாக்டர். மனவாட்டம் அடைந்தவர்களுக்கு 'அட்வைஸர்'. என்னுடைய பிரபல்யத்துக்குக் காரணம் நான் வாங்கியிருக்கும் 'டிகிரி'கள்.

பெரிய இடங்களிலிருந்து என்னைத் தேடி வருவார்கள். ஆண்களும் வருவார்கள். பெண்களும் வருவார்கள். சேர்ந்தும் வருவார்கள். தனித்தனியாகவும் வருவார்கள். பிரச்சினைகள். பலவிதமான பிரச்சினைகள். சிறிசாயுமிருக்கும். பெரிசாயுமிருக்கும், என்னுடைய ஃபீஸ் மட்டும் மூன்று இலக்கங்களுக்குக் குறையாது.

வருகின்ற பேஷண்ட் ஒவ்வொருவருக்கும் ஒரு ஃபைல் உண்டு. திரும்பவும் வந்தால் கேஸைப் புரிந்து கொள்வதற்குச் சுலபமாக இருக்கும். பல பெரிய புள்ளிகளின் மன வக்கிரங்கள் எனக்குத் தெரியும். கணவனுக்குத் தெரியாத மனைவியின் நடவடிக்கைகளும், மனைவிக்குத் தெரியாத கணவனது நடவடிக்கைகளும் எழுத்துக்களாகவும் குறியீடுகளாகவும் மாறி எனது ஃபைல்களில் தூங்குகின்றன.

ஃபைல்களுக்குப் பொறுப்பாக இருப்பது எனது ஸ்டெனோ. பெயர் கீதா, என்னுடைய பிரைவேட் செக்ரடரியும் அவள்தான். காஷியரும் அவள்தான். எல்லாம் (?) அவள்தான். எல்லாம் ...

எல்லாம் என்பது இப்போதல்ல, இனிமேல் தான். ஓடு மீன் ஓடி உறுமீன் வருமட்டும் வாடியிருக்கும் கொக்கு என்பார்கள். அந்தக் கொக்கு நான்தான்.

அவளுக்கு என்னிடம் கொஞ்சம் சுதந்திரம் அதிகம். இந்தச் சுதந்திரம் ஆரம்பத்தில் இல்லை. இப்பொழுது கொஞ்ச நாட்களாகத்தான்.

நான் கண்டிப்பானவன் என்று எனது மற்றைய வேலைக்காரர்கள் சொல்லுவார்கள். 'கள்' போட்டிருக்கிறேன். கவனமாக வாசியுங்கள். ஏராள மான வேலைக்காரர் 'கள்'. தோட்டக்காரன், சமையல்காரன், காவல்காரன், பியூன், கிளார்க் இத்யாதி, இத்யாதி...... ஆம், எல்லாரும் வேலைக்காரர்கள் தான். சொந்தக்காரர் கிடையாது. உறவு என்று சொல்லி வந்து போவதற்கும் யாரும் கிடையாது, நான் தனியன்.

நாற்பத்திரண்டு வயதில், தலையில் ஓரங்களெல்லாம் நரைத்துக்கொண்டும் நடுவில் வழுக்கை விழுந்து கொண்டும் இருக்கின்ற தனியன். பெட்ரூமில், குளியலறையில், லைப்ரரியில், வரவேற்பு அறையில், சாப்பிடும் மேஜையில், ஸோபாவில், நாற்காலியில், எல்லா இடத்திலும் புத்தகம் படிக்கின்ற தனியன். நடந்து கொண்டும் படிப்பேன்.

கீதா காலையில் எட்டு மணிக்கு டியூட்டிக்கு வருவாள். மாலையில் ஆறுமணிக்குப் போய்விடுவாள்.

கீதாவுக்கு மட்டும் சுதந்திரம் அதிகமென்று சொன்னேன்? ஆம். உண்மைதான்!

ஏன்?

அவள் வேலையில் கெட்டிக்காரி.

அது மட்டுமா?

இந்த பங்களாவில் கீதா இருக்கின்ற நேரங்களில் எனது மனம் துள்ளும்.

அவளுடைய அடர்த்தியான கருத்த கூந்தல். மினி ப்ளவுஸ். அதன் கவர்ச்சியான நிறங்கள். புதிய வண்ண டிஸைன்கள். காற்றில் படபடத்து விசிறி எழும் ஸாரி. குனியும்போதும், நிமிரும்போதும், திரும்பும் போதும் தெரியும் லாவண்யம். ஸாரியை ஒதுக்கி தோளில் தள்ளும் போது தெரியும் வளப்பம். செழுமை, மழமழப்பு அதனால் என் மனதில் ஏற்படும் கிளு கிளுப்பு—

வேலை முடிந்து கீதா வீட்டுக்குப் போய்விட்டாளென்றால் என்னிடமுள்ள சுறுசுறுப்பு போய்விடும். அவளையே நினைத்துக்கொண்டு இருப்பேன்.


படபடக்கும் அவளது கண்கள் எனது கண்களில் தெரிந்து கொண்டிருக்கும். உடம்பில் எங்குமே எலும்பு தெரியாதவாறு வெண்ணெயில் முழுகி எழுந்தவளைப் போன்ற மொழு மொழுவென்ற அவளது உருவம் எனது கண்களில் தெரிந்து கொண்டிருக்கும். 36-25-36 சைஸில் ஐந்து அடி ஆறு அங்குல உயரமுள்ள அவளது வடிவம் எனது கண்களில் தெரிந்து கொண்டிருக்கும்.

ஜின், சோடா, சிகரெட் இவற்றுடன் ஸோபாவில் சாய்ந்து அவளை ரசித்துக் கொண்டிருப்பேன். இதோ.... இப்போது செய்கிறேனே...... இது மாதிரி கட்டிலில் படுத்

துக்கொண்டு ஏதாவது யோசனை செய்துகொண்டிருப்பேன்: 'ஏதாவது' என்றால் அதில் தொண்ணூற்றென்பது வீதம் கீதா !

எதற்காக நான் அவளையே நினைக்கிறேன்......

அவளையே ....



✣ சினிமா உலகில் எம். ஜி. ஆரின் வாரிசாக வருவதற்கு யார் தகுதியுள்ளவர் என்ற போட்டி பல இளம் நடிகர்களிடையே இருந்து வந்தது. இந்த இடத்தைப் பிடிப்பதற்காகப் போட்டியிட்டவர்களில் ஜெயசங்கரும், ரவிசந்திரனும் குறிப்பிடத்தக்கவர்கள். இப்போது ரவிசந்திரனுக்கு தமிழ்ப்பட உலகில் மார்கெட் போய்விட்டது. ஜெய்சங்கரின் மார்கெட் மளமளவென்று உயர்ந்து வருகின்றது. குடிப்பழக்கமும், பல பெண்களுடனான தொடர்பும்தான் பல சினிமா நடிகர்களின் வாழ்க்கையைச் சீரழித்து இருக்கிறது. ரவிசந்திரனின் படவுலக மார்கெட் போனதற்கும் இதுதான் காரணம்! எம். ஜி. ஆரைப் போல தனது சொந்த வாழ்க்கையை தூய்மையுடயதாக வைத்துக்கொள்ளும் ஒருசில நடிகர்களுள் ஜெயசங்கரும் ஒருவர்!

இப்படி ஒருசந்தர்ப்பத்தில்,

நான் 'கீதா' 'கீதா' என்று நினைத்துக்கொண்டிருந்த நேரத்தில்தான்,

— அவன் வந்தான்,

அவன்......

நான் பார்த்திருக்கிறேன்.

கடந்த சில நாட்களாக, கீதா டியூட்டி முடிந்து வீட்டிற்குத் திரும்புகின்ற நேரங்களில் எல்லாம் வந்து, காத்திருந்து, அவளைத் தனது காரில் அள்ளிக்கொண்டு செல்கின்றவன். அவனைக் கண்டவுடன் கீதாவின் கண்களில் பூரிக்கும் ஆர்வத்தையும், உடலில் துறுதுறுக்கும் கவர்ச்சியையும் கண்டிருக்கிறேன். அவனை ஒட்டினாற்போல காரின் முன் ஸீட்டில் உட்கார்ந்து செல்லும் போதெல்லாம் குழிவிழும் அவளது கன்னங்களில் தோன்றும் செம்மையையும், கிளுகிளுப்பையும் அவதானித்திருக்கிறேன். எனக்கு எரிச்சலாக இருக்கும். இப்போது வந்தவன் அவன்தான்.

''என்னை உங்களுக்குத் தெரியாது'' என்றான்.

'தெரியும்' என்று நான் சொல்லவில்லை.

''எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியிருக்கிறது. அதனைத் தீர்ப்பதற்குத்தான் உங்களுடைய துணையை நாடி வந்திருக்கிறேன்'' என்றான்.

''உட்கார்'' என்றேன். உட்கார்ந்தான்.

ஆள் பார்ப்பதற்கு ஜம்மென்று இருந்தான். ஒல்லி

யான உயரமான கட்டான உடல், முகத்தில் கவர்ச்சியான மீசை. குறுகுறுக்கும் இளநகை. கண்களில் தெறிக்கும் வாலிபத் துடிப்பு. சுமாரான சிவப்பு. மேனியில் ஒரு மினுமினுப்பு.

இவனைப் போல நான் இருந்த காலத்தில் என்ன செய்து கொண்டிருந்தேன்?

ஃபிராய்ட், சட்டி, மாஸ்லோ, பாவ்லோவ்... எல்லாம் மேல்நாட்டு ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள்... புத்தகங்கள், புத்தகங்கள், புத்தகங்கள்...... கவர்ச்சியாக பிரிண்ட் செய்யப்பட்டு, அழகான அட்டை போடப்பட்டு, கெட்டியாக பைன்ட் செய்யப்பட்ட கனமான, தடித்த புத்தகங்கள்...

அவனைப் பார்த்தேன்.

''எனக்கு ஒரு பிரச்சினை'' என்றான்.

''இது ஒரு காதல் பிரச்சினை'' - அவன் நிறுத்திவிட்டு யோசித்தான். நான் ஜன்னலையே பார்த்துக்கொண்டிருந்ததைப் பார்த்த அவன் தப்புக் கணக்குப் போட்டிருக்க வேண்டும்.

''கோ... ஓன்... ஐ ஆம் லிஸ்னிங்.. '' என்றேன்.

''நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். புத்தகக் காதல் அல்ல, சினிமாக் காதல் அல்ல. உண்மையான காதல், அவளும் என்னைக் காதலிக்கிறாள். எங்கள் காதலுக்கு எந்த விதமான தடையும் இல்லை. ஆனால்... ஆனால்... நான் காணுகின்ற கனவுகள்... கனவுகள்...''

அவன் நிறுத்தினான். நிமிர்ந்து உட்கார்ந்தான், கைகள் இரண்டையும் தேய்த்து விட்டுக் கொண்டான். சட்டைப் பையிலிருந்த சிகரெட் கேஸை எடுத்தான். அழகான தங்கமுலாம் பூசிய இருபது சிகரெட்டுக்கள் வைக்கக்கூடிய அமெரிக்கன் சிகரெட் கேஸ். ''சிகரெட் பிடிக்கலாமா?'' என்றான். 'ஆஷ்ட்ரே'யை அவன் பக்கமாக நகர்த்தி வைத்தேன், ''தாங்க் யூ'' என்றான். தொடர்ந்தான்.

''படுத்தவுடன் தூங்கி விடுகின்றேன். தூக்கத்தில் கனவுகள் வருகின்றன. ஏராளமான கனவுகள். ஒவ்வொரு இரவிலும் வருகின்றன. விதம் விதமான கனவுகள். பெண்கள் பலர் வருகிறார்கள். அழகான பெண்கள். இளம் பெண்கள். மினி ஸ்கர்ட் அணிந்த பெண்கள். ஸாரி அணிந்த பெண்கள். பட்டாம் பூச்சிகள். அந்தப் பட்டாம் பூச்சிகளோடு சில பச்சையான நிகழ்ச்சிகள்.'' —அவன் திடீரென்று மெதுவான குரலில் ''அந்தப் பச்சையான நிகழ்ச்சிகளையும் விவரிக்க வேண்டுமா?'' என்றான்.

''வேண்டாம். கனவுகள் வருகின்றன. பச்சையான நிகழ்ச்சிகள் வருகின்றன, சரி. உனக்கு என்ன பிராப்ளம்?''


''கனவுகள் வருகின்றன. அழகிகள் வருகிறார்கள். ஆனால் ......என்னுடைய காதலி ஒரு நாள்கூட எனது கனவில் வந்தது கிடையாது..... ஏன்...எத்தனையோ பெண்கள் வருகிறார்

கள்......அவள் மட்டும் ஏன் வரவில்லை......?''

அவனுக்கு மூச்சு வாங்கியது, கண்கள் மின்னின.

யோசித்தேன்.

யோசிப்பதுபோல பாவனை பண்ணினேன்.



✣ பொதுவாக, ராஜாஜியைச் சாணக்கியர் என்று வர்ணிப்பது உண்டு, அரசியல் தந்திரத்தில் அபார தேர்ச்சியுள்ளவர் என்ற காரணத்தால்! இப்படிப்பட்ட ராஜஜியின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் காமராசர்! ராஜாஜியே தமது வாயால் 1953ம் ஆண்டில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் ''என்னைத்தான் சாணக்கியன் என்று இதுவரை சொல்லி வந்தார்கள், உண்மையில், என்னைக் காட்டிலும் இன்று காமராஜ் பெரிய சாணக்கியராக இருக்கிறார்'' என்று சொல்லியிருக்கிறார்! பதினெட்டு வருடங்களுக்கு முன்பு தம்மைப் பற்றி ராஜாஜி கூறியவார்த்தைகளை இன்று ஒரு பெண்மணியைப் பற்றித் தாம் குறிப்பிடவேண்டிய நிலை காமராசருக்கு ஏற்பட்டு இருக்கிறது! அந்தப் பெண்மணி —இந்திரா காந்தி!

கீதாவின் அழகான வாளிப்பான வெறியூட்டும் உருவம் எனக்கு முன்னால் நர்த்தனமாடியது.

எனது மூளை வக்கிரமாக வேலை செய்தது:

''எனது அருமை நண்பனே, இது சிக்கலான கேஸ் அல்ல. ரொம்ப சாதாரணகேஸ். சில உண்மைகளை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும். உன்னுடைய காதல் உண்மையான காதல் அல்ல. மறுபடியும் சொல்கிறேன் உன்னுடைய காதல் உண்மையான காதல் அல்ல. ஏராளமான பெண்கள் உனது கனவில் வருகிறார்கள். உனது காதலி மட்டும் வரவில்லை. இதனுடைய அர்த்தம் என்ன? நீ அவளை உண்மையாகக் காதலிக்கவில்லை. உனது உள்மனம் அவளை ஏற்க மறுக்கிறது. உன்னுடைய உள்ளத்தில் அவளுக்கு இடம் இல்லை; வீணான ஏதோ ஒன்றை நீ காதல் என்று நினைத்துவிட்டாய். திருமணம் ஆயிரங் காலத்துப் பயிர். அவளைத் திருமணம் செய்யாதே; உனது உள்ளம் அவளை ஏற்க மறுக்கிறது என்பது தெளிவாகிவிட்டது. அவளை மறந்துவிடு. இனிமேல் அவளுக்குப் பின்னால் சுற்றாதே. கனவில் வருகின்றவளாக ஒருத்தியைப் பார். அவ்வளவுதான்!'' என்றேன்.

அவன் எழுந்தான். ''தாங்க் யூ'' என்றான். இரண்டு நோட்டுக்களை எடுத்து எனது மேஜை மீது வைத்தான்.

அவன் கதவைத் திறந்து கொண்டு வெளியேறுவதையே பார்த்துக்கொண்டு இருந்தேன்.

பக்கத்தில் யாரோ 'க்குங்' என்று கனைத்தார்கள். திரும்பினேன். திரும்பினால்...

கீதா;

எனது கீதா, இனிய கீதா! எனது கனவுக் கன்னி!

எனது நெஞ்செல்லாம் இன்பமாய் பொங்கி வழிந்தது.

''கீதா, நீ எப்போது வந்தாய்'' என்றேன்.

''நான் அப்போதே வந்துவிட்டேன். நீங்கள் அவருடன் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். மற்றப் பக்கத்துக் கதவால் வந்து அந்தத் திரைக்குப் பின்னால் உங்களுடைய லைப்ரரியில்தான் இருந்தேன்''

நான் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தேன். அவளது கண்கள் படபடத்தன. முகத்தில் புரண்டு விளையாடிய கூந்தலை, கழுத்தை ஒரு வெட்டு வெட்டிப் பின்னால் தள்ளினாள். அவள் அப்படிச் செய்தபோது அவளது ஸாரி நழுவியது. பிளவுஸ் இறுக்கமாக பிடிப்பாக இருந்தது. நான் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தேன்.

"உட்கார் கீதா'' என்றேன்.

நாற்காலியில் உட்காரப் போனாள்.

''இப்படி வா கீதா, இப்படி உட்கார்'' என்றேன்.

நான் சாய்ந்துகொண்டிருந்த 'பெட்'டின் ஓரத்திலேயே அவளும் உட்கார்ந்தாள்.

''வந்தது யார் தெரியுமா?'' என்றாள்.

''தெரியாது'' என்றேன். சொன்னது பொய். பச்சைப் பொய்.

''அவர் குறிப்பிட்ட பெண், அவருடைய காதலி நான்தான்'' என்றாள்.

''ஓஹோ'' என்றேன். வெகு சிரமப்பட்டு செயற்கையான அந்த ஓஹோவை இயற்கை போல ஆக்கினேன்.

''அவர் கூறியது மாதிரித்தான் எனக்கும் கனவுகள் வருகின்றன. ஒவ்வொரு இரவிலும் வருகின்றன. ஒரு நாள்கூட அவர் எனது கனவில் வந்தது கிடையாது வருபவர் வேறொருவர். ஒவ்வொரு நாளும் ஒரே ஆள்தான் வருகிறார். அவருடன் நான் மிகவும் நெருக்கமாக இருக்கிறேன். நெருக்கமாக, மிக நெருக்கமாக. அது யார் தெரியுமா? நீங்கள்தான்!''

கீதா தலையைக் குனிந்து கொண்டாள். எனது உடலெல்லாம் புல்லரித்தது. ஆகாயத்தில் போயிங் விமானத்தில் பறப்பது போன்ற ஒரு உணர்வு. உடலெங்கும் ஒருவித பரவசம்.

''உண்மையாகவா?'' என்றேன்.

''உண்மைதான்'' என்றாள்.

''இதனுடைய அர்த்தம் என்னவென்று உனக்குத் தெரியுமா?'' என்றேன். எனது கைகள் அவளது கைகளைப் பிடித்துக்கொண்டன.

''தெரியும்'' என்று கூறிவிட்டு, கண்களை ஒரு சுழற்றுச் சுழற்றி என்னை நோக்கிய அவள்

மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டாள்.

''நான் அதிர்ஷ்டக்காரன் கீதா'' என்றேன். அவளை நெருங்கினேன். அவளும் நெருங்கினாள்.



✣ உலக அழகிகளுள் ஒருவரான ஜாக்குலினின் மகள் காரலின் கென்னடிக்கு இப்போது பதினான்கு வயதாகிறது. இவள் தனது அம்மாவைக் காட்டிலும் உறுதியான வனப்பான தேகக்கட்டுடன், அடர்ந்த கூந்தலுடன் நல்ல அழகியாகத் திகழப்போகிறாள் என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தென்படத் தொடங்கிவிட்டன. "இவளது கண்ணும் தலைமயிரும் அப்படியே அவள் தகப்பனை உரித்துவைத்தமாதிரி இருக்கிறது'' என்கிறார் காரலினின் பாட்டியான ரோஸ் கென்னடி. காரலினை பலவித தோற்றங்களில் படம்பிடித்து தங்களது பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு இப்போதே பத்திரிகைக்காரர்கள் போட்டி போடத் தொடங்கி விட்டார்கள்! ஜாக்குலினைப் போலவே காரலினும் உலகப்புகழ்பெற்ற அழகி ஒருத்தியாக ஆகப்போகிறாள்!

எனது கைகளினால் அவளது முகத்தை நிமிர்த்தினேன்.

எங்கள் இருவரது முகங்களும் மிக நெருக்கமாக நெருங்கிய அந்தக் க்ணத்தில்தான்,

கதவைத் திறந்துகொண்டு இரண்டு கண்கள் எங்களை உற்று நோக்குவதை அவதானித்தேன்.

அந்தக் கண்களுக்குச் சொந்தக்காரன்—

சற்று முன் வந்தவன், கீதாவின் காதலன்.

அவனாலும் கீதாவை மறக்க முடியவில்லைப் போலும்.

அவன் கையில் சிகரெட் கேஸ் பளபளத்தது.

அதை ஓங்கினான்.

எங்களை நோக்கி அதை வீசப்போகிறான் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

''பட்'' வீசி விட்டான்.

''விலகு கீதா, அவன் கொலை செய்யப்போகிறான்'' என்று அலறியபடியே கீதாவைத் தள்ளிக்கொண்டே சரிந்து திரும்பினேன்.

—தலையெல்லாம் வலித்தது.

தரையில் விழுந்து கிடந்தேன்.

நாற்பத்திரண்டு வயதில் ஒரு இளம் பெண்ணைப் பார்த்து ஆசைப்பட்டால் இந்தக் கதிதான் கிடைக்கும்!

கீதாவாவது, அவளின் காதலனாவது, அவர்களின் கனவுகளாவது!

மண்ணாங்கட்டி!

நான்தான் கனவு கண்டிருக்கிறேன்!

# கண் முத்தைச் சிந்தாதே!

பால் கேட்டு நீ அழுதால்
பால் தருவேன் கண்மணியே
பாண் கேட்டு நீ அழுதால்
பாண் தருவேன் என்மகளே
நீ கேட்டு அழுகின்ற
நீள் கோட்டுக் 'கொப்பி'யது
நாளெல்லாம் ஆனாலும்
நான் செய்ய ஏலுவதோ?

காசை நான் தந்தேன்
கடை கடையாய் நீ திரிந்தாய்
'கொப்பி கிடையாது
கொவுண் மேந்து ஓடரீது
ஸ்கூலில் வாங்' கென்றார்
ஸ்கூலில் வரவில்லை!
கண்ணே அழாதே
கண்முத்தைச் சிந்தாதே!

கொப்பிவரும்; கொஞ்சம்
'லேட்'டாகும் அவ்வளவே!
இதையும் பழகிக்கொள்
எங்கள்வள நாட்டினிலே
இந்த நிலை தன்னை
எல்லாரும் பழகிவிட்டார்
நீயும் பழகிக் கொள்
நீ வாழ வேண்டாமோ?

-"ராஜா"

✣ பொதுவாக இளம் நடிகைகள் ஸ்ருடியோவுக்கு வரும் போது அவர்கள் தாய்மாரும் கூடவே துணைக்கு வருவது வழக்கம், ஆனால் நடிகை லட்சுமி திருமணத்துக்கு முன்பும் தன்னுடைய தாயாரைத் துணைக்கு அழைத்து வருவதில்லை. ஒரு நாள் அவருடன் அவருடைய தாயாரும் காரில் வந்து இறங்



கினார். "என்ன நீங்களும் அம்மாவைத் துணைக்கு அழைத்து வரத் தொடங்கிவிட்டீர்களா?" என்று ஒருவர் கேட்டார். "இல்லையே, இன்றைக்கு அம்மாவுக்கும் இங்கே படப்பிடிப்பு இருக்கிறது!" என்று பதிலளித்தார் லட்சுமி. லட்சுமியின் தயார் ருக்மணியும் ஒரு சிறந்த நடிகை!

கேள்வி — பதில்
'வெள்ளி'
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

✣ திருமணமாகி பல ஆண்டுகளாக குழந்தை இல்லாத பெண்களுக்கு குழந்தை பிறக்க ஒரு மருந்து கண்டு பிடித்து இருப்பதாக டெல்லி மாநில கவர்னரின் மனைவியான ஆத்யா ஜா அறிவித்து இருக்கிறார். இது ஒரு ஆயுள்வேத மருந்து. "நீண்ட காலமாகக் குழந்தையே இல்லாத பல பெண்கள், இந்த மருந்தைச் சாப்பிட்டு குழந்தை உண்டானார்கள். குழந்தையே பிறக்காது என்று நம்பிக்கை இழந்த பெண்கள் கூட தாய் ஆனார்கள்" என்று திருமதி ஆத்யா ஜா கூறியிருக்கிறார். பிரபல சமூகசேவகியான ஆத்யா ஜா "பத்ம ஸ்ரீ" பட்டம் பெற்றவர், இந்த மருந்தை எல்லாருக்கும் இலவசமாகக் கொடுக்கிறார்.

✣ மனிதரில் மூன்று வகையினர் உண்டு தாம் நினைத்த குறிக்கோளை 'எப்படியும் அடைந்தே தீருவோம்' என்பவர் முதல் வகை. 'அடைவோமா?' என்று சந்தேகிப்பவர் இரண்டாம் வகை; 'அடையவே முடியாது' என்று ஓய்ந்து விடுபவர் மூன்றாம்வகை. முதல் வகையினர் பெரும்பாலும் வெற்றியே பெறுகின்றனர்!

✣ பழைய புத்தகமொன்றை எடுத்துப்படிக்கிறோம். திடீரென்று ஒரு "புல்ஸ்டொப்" (முற்றுந்தரிப்பு) புறப்பட்டு நகர்ந்து செல்லத் தொடங்குகிறது. சற்றுக்கவனித்தால் அது தான் புத்தகப் பூச்சி! ஒரு சமயம் கவிஞர் 'மஹாகவி' அந்தப்பூச்சியைப் புறங்கையால் தட்டினார். பூச்சி நசிந்து இறந்துவிட்டது. இதை 'நெருக்கென்றதென் நெஞ்சு' என்று மிக அழகாகத் தமது கவிதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# ஆனந்தா

திருக்குறள்

# கலண்டர்

எல்லா அம்சங்களும் பொருந்திய

ஒரு கவர்ச்சிகரமான தயாரிப்பு!

ஆண்டு முழுவதும் உங்களுக்கு

உற்ற துணையாய் விளங்குவது.

தயாரிப்பாளர்:

## ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்,

தந்தி: 'அச்சகம்' தொலைபேசி: 348

# சினிமா உலகின்

# 'மார்க்கண்டேயர்'

"தேடிவந்த
மாப்பிள்ளை"

★ ★ ★
★ ★ ★

'சினிமா உலகின் மார்க் கண்டேயர் எம். ஜி. ஆர்' என்று இந்த இதழில் ஒரு கேள் விக்குப் பதிலளிக்கையில் 'சாமிஜி' குறிப்பிட்டிருக்கிறுர்.



அது முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை என்ற அபிப்பிராயம் 'தேடிவந்த மாப் பிள்ளை' படத்தைப்பார்த்ததும் ஏற்படுகிறது! 'எம். ஜி. ஆரா இது? கிழட்டுக் கதாநாயகன் என்று கேலி செய்தார்களே அந்த நடிகரா இவர்!' என்று மூக்கின்மேல் விரல்வைக்கத் தோன்றுகிறது. ஒரு திறமை யான 'மேக்கப்மன்' அவரு டைய முகத்தில் இளமையைக் காட்டியிருக்கலாம். ஆனுல் அந்த உடற் கட்டில் வாலிப முறுக்கை ஏற்படுத்தியது யார்? இக்காலத்து வாலிபர்களுக்குக் கூட வராத துடிப்பும், ஓட்ட மும், ஆட்டமும் எப்படி இவ ருக்கு வருகின்றன? உண்மையில் எம். ஜி. ஆர் ஒரு அதிசய மனி தர்தான்!

பத்துப்பதினைந்து மனிதர் களைத் தனி ஒருவராக நின்று அடித்து நொருக்கும் காட்சிகளை விலக்கி விட்டுப் பார்த்தால், 'தேடிவந்த மாப்பிள்ளை' ஒரு நல்ல படம். கண்ணுக்குக் குளி ர்ச்சிதரும் வண்ணக் காட்சிகள். கொழும்பு 'வெசாக் பந்தல்' களில் காணப்படும் மின்னுெளி அலங்காரங்கள் அத்தனையை யும் 'தேடிவந்த மாப்பிள்ளை' ஒரு காட்சியில் பார்க்க முடிகி றது. ஜெயலலிதாவை விட் டால் எம். ஜி. ஆரோடு ஈடு கொடுத்து நடிப்பதற்கு வேறு 'பெரிய' நடிகை யாரும் இப் போது தோதாக இல்லை யென்றே தோன்றுகிறது! ●

VELL

மகத்தான வெற்றித் திரை ஓவியம்

ஒருமுறை பார்த்தவர்கள் திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்கிறார்கள்!

**யாழ். ராணி சினிமாவில்**

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் — ஜெயலலிதா
விஜயகுமாரி, முத்துராமன், நாகேஷ், நம்பியார், T. K. பகவதி
முதலியோர் நடித்த

**சிவாஜி கணேசனின் 150-வது படம்**

மல்லியம் புரொடக்ஷன் அளிக்கும்

# சவாலே சமாளி

ஈஸ்ட்மென் கலர்

கதை-வசனம்-டைரக்ஷன்: மல்லியம் ராஜகோபால்

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்

# NORTHERN SPORTS CLUB

(Members Only)

New Market View

Hospital Road, JAFFNA.

**PONGAL VILLA**

**on 15th, JANUARY 1972.**

**TOMBOLA** MORNING SESSION AT 11-30 a. m.
EVENING SESSION AT 6-30 a. m.

**Rs. 1750/- in SNOWBALLS TO A FINISH**

3 GAMES of Rs. 100/- to a finish
10 GAMES of Rs. 50/- to a finish
PLUS

**ONE BRAND NEW ANTON SANYO**

Super Sound Transistor Radio (WORTH Rs. 775/-)
AND Rs. 150/- to a finish.

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.